விலை ரூபா 1-25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 சித்திரை 16 ஷஃபா 19 இதழ் 77

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 29-4-1986

## பளுகாமம் நேரடி மோதல்:

# அதிரடிப்படை தரப்பில் பலத்த உயிர்ச்சேதம்?

(மட்டக்களப்பிலிருந்து நமது நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பளுகாமம் பகுதியில் முகாமிடச்சென்ற அதிரடிப் பிரிவுப் பொலிஸாருக்கும் போராளிகளுக்கும் இடையே நேரடி மோதலில் பொலிஸார் தரப்பில் பலத்த உயிர்ச்சேதம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

நேற்றுப் பிற்பகல் 2-30மணியளவில் இச்சமர் இடம்பெற்றது.

பொலிஸ் தரப்பில் படுகாயமடைந்த சப்இன்ஸ்பெக்டரும் இரு பொலிஸ் கான்ஸ்டபிள்களும் ஹெலிகொப்டர் மூலம் மட்டக்களப்பு ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்பட்டனர். ஆஸ்பத்திரியில் சப் இன்ஸ்பெக்டரும் ஒருபொலிஸ் கான்ஸ்டபிளும் மரணமானுர்கள். பலியானவர்களின் சடலங்களுடன் படுகாயமடைந்த கான்ஸ்டபிளும் ஆபத்தான நிலையில் கொழும்பு ஆஸ்பத்திரிக்கு விமானமூலம் எடுத்துச் செல்லப்பட்டனர்.

(5ம் பக்கம் பார்க்க)

## ● இந்தியக்குழு இன்று வருகிறது

# இம்முறை தோல்விகண்டால் இந்திய முயற்சி இனி இல்லை?

## ஜனுதிபதியை நாளை குழு சந்திக்கும்

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்னை தொடர்பான இலங்கை அரசின் புதியதிட்டம் சம்பந்தமாக ஆலோசனைகள் நடத்துவதற்கு இணை அமைச்சர் திரு. ப. சிதம்பரம் தலைமையிலான இந்திய அரசு உயர்மட்டக் குழு இன்றுமாலை கொழும்புவந்து சேரவுள்ளது.

இக்குழு நாளை புதன்கிழமை ஜனுதிபதி திரு. ஜெயவர்த்தனவைச் சந்திக்கும்.

இன்று மாலை சுமார் 6-30 மணியளவில் பம்பாய் வழியாக கட்டுநாயகா விமான நிலையத்தை வந்தடையும் இக் குழுவை இந்தியத் தூதர் திரு. ஜே என் டிக்ஸிற் வரவேற்பார்.

திருவாளர்கள் சிதம்பரம் பண்டாரி ரஞ்சன் மத்தாய், பாலகிருஷ்ணன ஆகியோரைக் கொண்ட இக்குழு கொழும்பு ரும் வழியில் சென்னைசென்று தமிழ்த் தலைவர்களைச் சந்திக்குமென்று எதிர்பார்க்கப்பட்ட போதிலும், இவர்கள் சென்னை செல்லாமல் பம்பாயிலிருந்து நேராகக் கொழும்பு வருவர் என அறிவிக்கப்பட்டுள்ளது

நாளைக்காலை இவர்கள் ஜனுதிபதி ஜெயவர்த்தனவைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்துவார்கள் அதன் பின்னர் அமைச்சர்கள், லலித், தொண்டமான், ஹமீத் ஆகி

(5ம் பக்கம் பார்க்க)

## "புதிய யோசனைகள் முன்னேற்றமானவை" சென்னையில் 'அமிர்'

[சென்னை]

இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜனப் ஹமீத்தினுல் இந்திய அரசிடம் கையளிக்கப்பட்டுள்ள ஆலோசனைகள், இலங்கை அரசினுல் கடந்த ஆகஸ்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆலோசனைகளிலின்றும் முன்னேற்றமாகக் காணப்படுகிறது என்று தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம் கூறியுள்ளார்.

புதுடில்லிக்கு தமது சகாக்கள் சகிதம் சென்று இந்தியப் பிரதமர் உட்படப் பல்வேறு அதிகாரிகளுடன் ஆலோசனைகள் நடத்திவிட்டுச் சென்னை

(5ம் பக்கம் பார்க்க)

## ராஜீவை சிதம்பரம் சந்தித்தார்

[புதுடில்லி]

இன்று கொழும்பு வரும் இந்திய உயர்மட்டக் குழுவின் தலைவரான இணை அமைச்சர் திரு ப சிதம்பரம் நேற்று புதுடில்லியில் பிரதமர் ராஜீவ் காந்தியையும், வெளிவிவகார கொள்கைக் கமிட்டித் தலைவர் திரு ஜி பார்த்தசாரதியையும் தனித்தனியே சந்தித்துப் பேசினர்.

நடைமுறை ரீதியில் அதிகா

(5ம் பக்கம் பார்க்க)

## 34 பேர் கைது

(யாழ்ப்பாணம்)

இரணைதீவிலிருந்து இரு படகுகளில் இந்தியா சென்ற 34 பேர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை கைது செய்யப்பட்ட இவர்கள் நேற்று முன்தினம் பலாலி இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

### கடற்படையினரால்

## காரைநகர் - காவலூர் 'பாதை' அகற்றப்பட்டது

[வேலணை]

காரைநகர் ஊர்காவற்றுறைக் கடலில் சேவையாற்றி வந்த பாதையைக் கடந்த ஞாயிறு காலை காரைநகர் துறைமுகத்தில் வைத்துக் காரைநகர் கடற்படையினர் இழுத்துச் சென்றனர்.

இப் பாதையைக்கொண்டு செல்வதற்காக மோட்டார் படகில் வந்த இவர்கள் ஊர்காவற்றுறை, காரைநகர் துறைமுகங்களின் கரைகளை நோக்கிப் பல தடவைகள் துப்பாக்கிப் பிரயோகஞ் செய்தனர். பாதையைப் படையினர் கொண்டு சென்றதால் இத் துறைமுகங்களால் இனிமேல் வாகனங்கள் எதுவும் கொண்டு

(8ம் பக்கம் பார்க்க)

## "இலங்கை தமிழர் துக்கதினம் பிரகடனப்படுத்தவேண்டும்'

[யாழ்ப்பாணம்]

"தென்னுபிரிக்காவில் ஒடுக்கப்பட்ட இனத்தைச் சேர்ந்த 500 பேர் இறந்ததினுல் ஜூன் 16ந் திகதியை உலக திருச்சபைக் கழகம் துக்கதினமாகப் பிரகடனப்படுத்தியது. இதே போல இலங்கைத் தமிழர்களின் அழிவுக்காகத் துக்கதினம் பிரகடனம் செய்யவேண்டும்".

இவ்வாறு தந்தை செல்வா ஞாபகார்த்த ஏழு சொற்பொழிவுகள் அடங்கிய நூல் வெளியீட்டு விழாவில் பேசும் போது பேராசிரியர் கு. நேசையா குறிப்பிட்டார்

யாழ் வை எம் சி, ஏ மண்டபத்தில் நடைபெற்ற இவ் வெளியீட்டு விழாவில் முதற் பிரதியை யாழ் மாநகரசபை ஆணையாளர் திரு சி வி. கே. சிவஞானம் பெற்றுக்கொண்டார்.

யாழ் மாநகரசபை ஆணையாளர் தமது உரையில், "சரியானதோ பிழையானதோ வரலாறுகள் எழுதப்படவேண்டும் பெரியோர்களின் சமூக சேவைகள் எழுதப்படவேண்டு. வரலாற்றின் நோக்கில் அவை மக்களால் விமர்சிக்கப்படும் அப்போது சரி, பிழை என்பன தெரிந்துகொள்ளப்படும்" என்ருர்

(5ம் பக்கம் பார்க்க)

## 'கடத்தப்பட்ட வர்த்தகர்கள்:

# 30-ம் திகதிக்குமுன் விடுதலை இன்றேல்மாற்றுநடவடிக்கை'

[யாழ்ப்பாணம்]

"யாழ் வர்த்தகர் சங்க உறுப்பினர்களான பொன் மதிமுகராசா, பொ தெய்வேந்திரன், ஆ. செல்லையா மற்றும் மஸ்கன் உரிமையாளர் ஆகியோரை கடத்திச் சென்றவர்கள் இம்மாதம் 30ம் திகதிக்கு முன் அவர்களை விடுதலை செய்யவேண்டும். விடுதலை செய்யப்படாத பட்சத்தில் மாற்று நடவடிக்கை எடுக்கப் படவேண்டிய நிர்ப்பந்தத்திற்குட்பட்டுள்ளோம் என்பதை மிகவும் மனவருத்தத்துடன் யாழ். வர்த்தகர்களின் சார்பில் வர்த்தகர் சங்க அதிகார சபை சம்பந்தப்பட்ட கடத்தற்காரர்களுக்குப் பணிவுடன் தெரிவிக்கிறது".

இவ்வாறு யாழ் வர்த்தகர் சங்க ஆட்சிக் குழு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

"வர்த்தகர்களாகிய நாம் நம் சகோதர வர்த்தகப் பெருமக்களுக்கு இழைக்கப்படும் அநீதகளைக் கண்டு பொறுமையுடன் இருக்கமுடியாத நிலையில் உள்ளோம். தொடர்ந்தும் வர்த்தகத்தை நடத்துவதா அல்லது முழுமையாக மூடிவிடுவதா என்று வர்த்தக சமுதாயம் சிந்திக்கவேண்டிய நிலையில் இன்று உள்ளது.

"வர்த்தகர்களாகிய நாங்கள் எங்கள் பிரதேசத்தில் நாளாந்தம் மிகவும் கஷ்டப்படும் தமிழ்பேசும் மக்களின் சேவகர்களாவோம். எமது இந்தச் சேவையைத் தடுக்கும் முகமாகவே சில இனந்தெரியாதவர்கள் இப்படியான அநாகரிகமான செயல்களில் ஈடுபடுகிருர்கள் இதனை நாம் பொறுமையுடன் சகித்துக்கொள்ள முடியாது.

"ஆகவே, கடத்திச்செல்லப்பட்ட வர்த்தகர்களைக் கடத்திச் சென்றவர்கள் உடனடியாக விடுதலைசெய்து ஒரு சுமுகமான முடிவுக்கு வருமாறு வர்த்தக சங்க ஆட்சிக் குழு கேட்டுக்கொள்கின்றது". [ஐ]

## போராளிகள் மறைவு: குடாநாடெங்கும் துக்கம்

[யாழ்ப்பாணம்]

காரைநகர், பருத்தித்துறை கடல்பகுதிகளில் படகுகளில் வந்த போராளிகள் கடற்படையினரின் தாக்குதலுக்குப் பலியானதைத் தொடர்ந்து யாழ். குடாநாடெங்கும் நேற்றுத் துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.

வீதிகள் எங்கும் வாழைகளும் தென்னைகளும் ஏராளமாகக் கட்டப்பட்டுள்ளதுடன் எங்கும் தோரணங்களும் கறுப்புக் கொடிகளும் தொங்கவிடப்பட்டுள்ளன. எங்கும் அமைதியும் சோகமும் நிலவுகின்றன நேற்றுப் பெரும்பாலான கடைகள் பூட்டப்பட்டிருந்தன.

இன்றும் குடாநாடெங்கும் துக்கம் அனுஷ்டிக்கப்படும்.

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

''புறொயிலர்'' இறைச்சிக் கோழி விற்பனைக்குண்டு. தொடர்பு: கு. இராசரத்தினம், ஆனந்தநிலையம், நவிண்டில், கரவெட்டி.
(C1936)

நல்ல நிலையிலுள்ள Akai Deck Gx 310D, Audio Amp li Fier Am 2 800, Technic Deck, Hitachi 630 Model, With Three Way Boxes விற்பனைக்குண்டு. Recording Bar உரிமையாளர்களுக்கு விஷேட சலுகை உண்டு. (Sanyo 20 inches Colour T V, Generater 1000 Watts, Honda) அருளானந்தா, C/O ராதா, 21, மேம்படி வீதி, யாழ்ப்பாணம்.
(C- 2032)

சண்டிலிப்பாயில், மானிப்பாய் — காரைநகர் றோட்டிலிருந்து 50 யாருக்குள் ஐயனார் வீதியில் முகப்புடைய 4 பரப்புப் பனங்காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு; சண்முகம், இளைப்பாறிய ஆசிரியர், சண்டிலிப்பாய்.
[C 2045]

அயர்பாடி ராசிபலன் வெளியீடு புதுவருட 1986-4-14 முதல் 1987-4-13 வரையுள்ள பலாபலன்கள். 12 ராசிக்கும் ஒரே பிரதி. ஒரு புத்தகம் விலை ரூபா 6/- மட்டும். தபாலில் பெற விரும்புவோர் முத்திரை அனுப்பி பெறவும். விலாசம்: ஆயர்பாடி சோதிட நிலையம், தெல்லிப்பழை.
(C 2043)

மாகியம்பதி கந்தரோடை றோட்டிலுள்ள 6 பரப்புக் காணியும், நல்ல தண்ணீர் கிணற்றுடன் கூடிய சகல வசதிகளுடன் கூடிய வீடும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய விலாசம்: க. அப்புத்துரை மாஸ்ட்டர், ''மலர் இல்லம்,', அளவெட்டி தெற்கு.
(C 2048)

### தேவை

வெற்று சீமெந்து பைக்கற்றுகள் தேவை. வைத்திருப்பவர்கள் தொடர்பு கொள்ளவும். அண்ணா இன்டஸ்றீஸ், இணுவில். (A 627)

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

# பலாலி பகுதி பதற்றத்தால் நோயாளர் வெளியேற்றம்

(பண்டத்தரிப்பு)

பலாலிப் பகுதியில் ஏற்பட்ட பதற்ற நிலையினாலும், மயிலிட்டி கடற்கரைப் பகுதியில் பீரங்கித் தாக்குதல்கள் அடிக்கடி இடம்பெற்று வருவதாலும் ஏற்பட்ட அச்சநிலையினாலும் மயிலிட்டி மார்பு நோய் வைத்தியசாலையில் தங்கியிருந்த நோயாளர்களில் பலர் அங்கிருந்து வெளியேறியுள்ளனர்.

அண்மைக்காலங்களில்வைத்தியசாலை பகுதியில் ஆயுதப் படையினரின் நடமாட்டம் அதிகரித்து வருவதால் இங்கு கடமையாற்றி வரும்ஊழியர்கள் குறிப்பாக சிற்றூழியர்கள் மிகுந்த அச்சமடைந்துள்ளனர். இவர்களில் பலர் தம்மை வேறு பாதுகாப்பான இடங்களுக்கு இடமாற்றம் செய்யுமாறு பேலிடத்திற்கு விண்ணப்பித்துள்ளனர்.

## ஓராண்டு நினைவு அஞ்சலி



**வ. சி. இராஜநாயகம்**

மலர்வு: 1907-09-29
உதிர்வு: 1985-04-29

இதயத்தின் துடிப்பாய் என்றும்
எண்ணத்தில் நிலைத்து நின்று
அதியன்புத் தெய்வமாகி
ஆண்டொன்று கழிந்ததையா
இதமான வாழ்வு தந்து
என்றென்றும்எல்லாமாகி
உதய சூரியனாய் நாளும்
உள்ளத்தில் உயர்வு தந்து
பதவிகள் பட்டம் தந்து
பண்புடன் வாழவைத்தீர்
புதல்வர்கள் நாம் உம் நாமம்
புவிதனில் நிலைக்கும் வண்ணம்
பதமலர் போற்றுகின்றோம்
இதயத்தில் உயிர்ப் பேயாவீர்.

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக இன்று (செவ்வாய்) மாலை 4-30 மணிக்கு பத்தாவத்தை புனித பிலிப்பு நேரியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

மக்கள், மருமக்கள்,
சகோதரர்கள்,
பேரப்பிள்ளைகள்.

'ஜெயபதி'
பத்தாவத்தை,
இளவாலை. C 2026

## முகாம் அருகில் சுவரொட்டிகள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி இராணுவமுகாமிற்குச் சமீபமாக பொது மக்கள் எழுதி வெளியிட்டது போன்ற சுவரொட்டிகள் காணப்படுகின்றன. அச் சுவரொட்டிகளில் போராளிகளே எம்மைத் துன்புறுத்தாதீர்கள். இந்தியாவிற்குத் திரும்பிச் சென்றுவிடுங்கள் என்று கூறும் வாசகங்கள் உட்படபல வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டுள்ளன. இதையிட்டு இப் பகுதி மக்கள் மத்தியில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

## 1-ம் ஆண்டு நினைவு அஞ்சலி



**செல்வன் வல்லிபுரம் முருகையா (குரு)**

ஆண்டவன் படைப்பில்: 10 06-1964

ஆள்பவன் பறிப்பில்: 09-05-1985

திதி: 29-04-1986

நீங்காத நினைவுடன் எம் நெஞ்சில் நிலையானஇடம் கொண்டாய்! அழியாத எம்நெஞ்சில் ஆண்டொன்று கழிந்து விட்டாய்! அரக்கர் கையால் அநியாயமாக கொலை கொண்ட அப்பாவி தமிழ் மகன் நீ அன்புத் தெய்வமே நீ எங்களை விட்டுப் பிரிந்தாலும் உன் நினைவு எங்கள் நெஞ்சங்களை விட்டகலாது உன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உன் பிரிவால் துயருறும்:
அம்மா, ஐயா,
அண்ணாமார்கள்,
அக்காமார்கள்,
தங்கைமார்கள்,
பெரியய்யாமார்,
பெரியம்மாமார், அப்பு,
ஆச்சிமார்கள், மாமா,
மாமிமார்கள், மச்சான்,
மச்சாள்மார், பெருமக்கள்,
மருமக்கள், உற்றூர்,
உறவினர்கள்,
நண்பர்கள்.

வல்லிபுரம் குடும்பத்தினர்.
சமரபாகு
என்னம் குளம்,
வல்வெட்டித்துறை.
C 2044

பொ. காங்கேயன்,
சட்டத்தரணி.
திருநெல்வேலி,

### பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

மரணசாதன மேதுமின்றி காலஞ்சென்ற கோண்டாவில், ஸ்ரேசன் றோட், நவரட்ணராஜா ஜெயதேவன் விட்டுச்சென்ற சொத்துக்கள் சம்பந்தமாக,
— மரணமெய்தியவர்.

வழ. இல:- தத்துவம் 3861
நவரட்ணராஜா ஜெயதேவன்கைம்பெண்கிசியாமளா, பிறவுண் றோட், தொழில்நுட்பக் கல்லூரி முன்பாக, யாழ்ப்பாணம்.
— மனுதார்.

இவர் தனது தத்துவகாரர் கனகசபை இரங்கநாதன் மூலமாக.
—எதிராக

1. ஜெயதேவன் பிரசாந் (பராயமற்றவர்) பிறவுண் றோட், தொழில்நுட்பக் கல்லூரிமுன்பாக, யாழ்ப்பாணம்.
2. இராசையா பாலசிங்கம், கொக்குவில்.

—எதிர் மனுதார்கள்.

மேலே குறிப்பிடப்பட்டிருக்கும் இலக்கங்கொண்ட மரணசாதன வழங்கு மேலே குறிப்பிடப்பட்ட மரணமெய்தியவரின் மரணச் சொத்துக்களையும், உடமைப் பொருட்களையும் நிர்வகிப்பதற்கு மேலே குறிப்பிடப்பட்டிருக்கும் மனுதார் நிர்வாகப் பத்திரம் தனக்கு வழங்குமாறு இந்நீதிமன்றத்தில் இவ் வழக்கைத் தொடுத்தமையினால் இந்நீதிமன்றம் அவர் கோரிக்கைக்கு இணங்கிப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இது சம்பந்தமாக அக்கறையுளள ஆள் எவரும் 1985ம் ஆண்டு ஆனி மாதம் 7ந்திகதி முற்பகல் 9-00 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி இவ்வழக்கிற் பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளையை ஏன் முற்றூனதாக்கப் படலாது என்பதற்குத் தக்க காரணமிருப்பின் அதனை இந் நீதிமன்றத்துக்குக் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றூர்.

இந்த 1985ம் ஆண்டு சித்திரை மாதம் 9ந் திகதி என்னுல் வரையப்பட்டது.

நீதிமன்றக்கட்டளைப்படி,
கு.குலசிங்கம்,
பதிவாளர்,
யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்.

என்னுல் வரையப்பட்டது.
பொ.காங்கேயன்,
மனுதாரின் சட்டத்தரணி.
20-9-85

காரணம் காட்டும் திகதி 15-11-1985க்கு நீடிக்கப்பட்டுள்ளது.

கு. குலசிங்கம்,
பதிவாளர்.

14-02-85
காரணம் காட்டும் திகதி 02-05-1985 வரை நீடிக்கப்பட்டது.

கு. குலசிங்கம்.
பதிவாளர்.
[C 2049]

பொ. காங்கேயன்
சட்டத்தரணி,
திருநெல்வேலி.

### பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

மரணசாதனம் எதுவுமின்றி காலம் சென்ற இல. 15, செட்டித்தெரு, நல்லூரைச் சேர்ந்த வேலுப்பிள்ளை பத்மநாதன் விட்டுச் சென்ற சொத்துக்கள் விடயத்தில்
- மரணமெய்தியவர்.

வழ. இல: தத்துவம்/3927
வேலுப்பிள்ளை நவரட்ணராஜா தனது தத்துவதாரர் சுவாமிநாதன் இராஜரட்ணம் பெண் கமலாம்பிகை மூலமாக மானிப்பாய் றோட், உரும்பிராய் மேற்கு, உரும்பிராய்.

மனுதார்.

1. சுவாமிநாதர் இராஜரட்ணம்
2. பெண் கமலாம்பிகை மானிப்பாய் றோட் உரும்பிராய் மேற்கு, உரும்பிராய்.
3. வேலுப்பிள்ளை குலசிங்கம் வெட்டுக்காடு, திருகோணமலை றோட், மட்டக்களப்பு.
4. கணபதிப்பிள்ளை தில்லையம்பலமும்
5. பெண் தனபாக்கியலட்சுமியும் இல, 15, செட்டித் தெரு, நல்லூர்

எதிர்மனுதார்கள்.

மேலே குறிப்பிடப்பட்டிருக்கும் இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே குறிப்பிடப்பட்ட மரணமெய்தியவரின் மரணச் சொத்துக்களையும், உடமைப் பொருட்களையும் நிர்வகிப்பதற்கு மேலே குறிப்பிடப்பட்டிருக்கும் மனுதார் நிர்வாகப் பத்திரம் கணக்கு வழங்குமாறு இந் நீதிமனறத்தில் இவ் வழக்கைத் தொடுத்தமையினால் இந் நீதிமன்றம் அவர் கோரிக்கைக்கு இணங்கிப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இது சம்பந்தமாக அக்கறையுள்ள ஆள் எவரும் 1986ம் ஆண்டு சித்திரை மாதம் 04ம் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி இவ்வழக்கிற் பதியப்பட்டபின்னுறுதிக்கட்டளையை ஏன் முற்றூனதாக்கப்படலாகாது என்பதற்குத் தக்க காரணம் ஏதும் இருப்பின் அதனை இந் நீதிமன்றத்துக்குக்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகிறீர்.

இந்த 1985ம் ஆண்டு பங்குனிமாதம் 21ம் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி
கு. குலசிங்கம்
பதிவாளர்.
யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்.

என்னுல் வரையப்பட்டது,
பொ. காங்கேயன்
மனுதாரின் சட்டத்தரணி.
28-04-86

காரணம் காட்டும் திகதி 30-05-86க்கு நீடிக்கப்பட்டுள்ளது.

கு. குலசிங்கம்
பதிவாளர்.
C 2050

### கலாநிலையம், மாவடிச் சந்தி, வட்டுக்கோட்டை.

நிலைய வெள்ளி விழா பற்றிக் கலந்தாலோசிக்க பழைய ஆசிரியர்களும், மாணவ மாணவிகளும் எதிர்வரும் 1-5-86 வியாழக்கிழமை காலை 9-00 மணிக்கு கலாநிலையத்தில் தவருது கூடும்படி வேண்டப்படுகின்றனர்.

க. கயிலாயநாதன்,
கலாநிலைய முதல்வர்.
(C 2046)

### பணிவான வேண்டுகோள்

84 ஸ்ரீ 6531 இலக்கமுடைய எனது வெஸ்பா ஸ்கூட்டரை 30-3-86 நள்ளிரவில் ஆயுதம் தாங்கிய நபர்கள் வானில் எமது வீட்டுக்கு வந்து அவசர தேவைக்காக மேற்படி ஸ்கூட்டரை எடுப்பதாகவும் மறுநாள் திருப்பி ஒப்படைப்பதாகவும் உறுதி கூறி எடுத்துச் சென்றனர். ஆனால் இன்றுவரை ஒப்படைக்கவில்லை.

இதனால் நோயாளியான என்னால் தொழில் முயற்சி செய்ய முடியாமல் கஷ்டப்படுகிறேன். தயவு செய்து புனித இயக்கங்கள் இதில் முயற்சித்து எனது ஸ்கூட்டரை எடுத்து தருமாறு மிகவும் பணிவுடன் வேண்டுகிறேன்.

வ. நமசிவாயம்,
ஆலடி வைரவர் கோவிலடி,
ஆனைக்கோட்டை.
(C 2037)


### அறிவித்தல்

**M. S. M Junaid Opticians**

**எம். எஸ் எம். யூனெட்**

மூக்குக் கண்ணாடி தயாரிப்பாளர்.

எமது ஸ்தாபனத்திற்கு இலங்கையில் வேறு கிளைகள் இல்லை.

144, கே. கே. எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
(C- 033)

## காங்கிரஸ் கட்சியின் முக்கியஸ்தர் நால்வர் பதவி நீக்கம்!

# முன்னாள் அமைச்சரும் அடங்குவர்

(புதுடில்லி)

**இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி, அகில இந்திய காங்கிரஸ் (ஐ) கட்சியின் மத்தியக் கமிட்டியில் பல திடீர் மாற்றங்களைச் செய்துள்ளார். முன்னாள் நிதியமைச்சர் ஒருவரும், மூன்று முன்னாள் முதலமைச்சர்களும் கட்சியிலிருந்து விலக்கப்பட்டுள்ளனர்.**

கடந்த சனிக்கிழமை இந்த மாற்றங்கள மேற் கொள்ளப்பட்டன. காலஞ் சென்ற பிரதமர் இந்திராகாந்தியின் அமைச்சரவையில் நிதியமைச்சராகவிருந்த திரு. பிரணாப்முகர்ஜி கட்சியின் அடிப்படை உறுப்பினர் பதவியிலிருந்து ஆறுண்டு காலத்துக்கு இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளார். திரு. முகர்ஜி இந்திரா காந்தியின் அமைச்சரவையில் இரண்டாவது முக்கிய ஆளாகக் கணிக்கப்பட்டவர். ஆயினும் பின்னர் அவர் ராஜீவ் காந்தியின் அமைச்சரவையில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

கட்சியிலிருந்து விலக்கப்பட்ட ஏனைய மூவரும் முன்னாள் உத்திரப் பிரதேச முதலமைச்சர் திரு ஸ்ரீபதி மிஸ்ரா, முன்னாள்மேற்குவங்காள முதல்வர் திரு.பி. சர்மா, முன்னாள் அசாம் முதல்வர் திரு.பிரகாஷ் ஆகியோராவர்.

கட்சிக்கெதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகவே இவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கட்சியின் பொதுச்செயலாளர் திரு கருப்பையா மூப்பனார் கூறியுள்ளார். ஆயினும் திரு முகர்ஜி இதனை மறுத்துள்ளதுடன் தாம தொடர்ந்தும் காங்கிரஸ் கட்சியில் விசுவாசமிக்க ஊழியனாகவே இருக்கப் போவதாகக் கூறியுள்ளார்.

இந் நால்வர் மீதும் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கையை கட்சியின் பல பிரமுகர்கள் வரவேற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது [செ]

---

## உலகச் செய்திகள்

### மார்க்கோஸ்—

# மீண்டும் தாயகம் மீள விரும்புகிறாராம்

[வாஷிங்டன்]

பிலிப்பைன்ஸின் முன்னாள் ஜனாதிபதி மார்க்கோஸ் தான் மீண்டும் பிலிப்பைன்ஸ் திரும்பி ஆட்சி செய்ய விரும்புவதாக அமெரிக்க ஜனாதிபதி றீகனிடம் கூறியுள்ளார்.

ஜனாதிபதி றீகன் ஜப்பானுக்குச் செல்லும் வழியில் ஒரு நாள் ஹோனலூலுவில் தங்கியிருந்தார். அபபோது அவர் திரு மார்க்கோசுடன் தொலைபேசி மூலம் உரையாடினார் இவவுரையாடலின் போதே திரு.மார்க்கோஸ் தனதுவிருப்பத்தைத் தெரிவித்தாராம்.

ஆயினும் றீகன் பிலிப்பைன்ஸின் அக்கினோ அரசுக்கான தனது ஆதரவு கேள்விக்கிடமில்லாதது எனக் கூறியதாகத் தெரியவருகிறது.

இதனிடையே மார்க்கோஸ் தான் விரும்பும் வரை அமெரிக்காவில் தங்கியிருக்கலாம் என அமெரிக்க அரசாங்கம் மார்க்கோஸிடம் கூறியுள்ளதாகத் தெரிய வருகிறது.

அமெரிக்காவில் திரு. மார்க்கோஸ் மீதான அதிகாரிகளின் கெடுபிடிகள் அதிகரித்து வருவதனால் திரு.மார்க்கோஸ் வேறு பல நாடுகளிடம் அரசியல் தஞ்சம் கோரியிருந்தாராயினும் எந்த நாடும் அவரை ஏற்க மறுத்து விட்டது குறிப்பிடத்தககது, [செ]

---

# சோவியத்தில் சூரிய ஒளி சிகிச்சை

(மாஸ்கோ)

ஆஸ்த்மா, நிமோனியா, நரம்பு மண்டல நோய்கள் முதலியவற்றால் பாதிக்கப்பட்டிருந்த சுமார் 300 க்கு மேற்பட்ட நோயாளிகள் ரஷ்யாவிலுள்ள சூரிய சக்தி சிகிச்சை நிலையமொன்றில் சிகிச்சை பெற்றுக் குணமடைந்துள்ளனர்

தாஷ்கென்டில் அமைக்கப்பட்டுள்ள சூரிய சக்தி நிலையத்திலேயே மேற்படி சிகிச்சை அளிக்கப்பட்டது. இச் சிகிச்சை முறைக்கான புதிய சாதனம் உஸ்பெக் விஞ்ஞானப் பேரவையைச் சேர்ந்த பௌதிக ரசாயனக் கழகத்தில் உருவாக்கப்பட்டது.

இச் சிகிச்சை நிலையத்தில் சிகிச்சைபெற்ற பொறியியலாளர், கஸன் குஸனுவ் சூரிய சக்தி சிகிச்சை பற்றிக் கூறுகையில் ''மூட்டுக்களில் கடுமையான வலியுடன் எனக்கு நடமாடுவது மிகவும் கஷ்டமாக இருந்தது. எனக்கு 18 முறை சூரிய ஒளிச் சிகிச்சை அளிக்க வேண்டுமென்று தீர்மானித்த மருத்துவர்கள் 10-வது முறை சிகிச்சை பெற்றவுடனேயே என் வலி பெரிதும் குறைந்தது சிகிச்சையின் முடிவில் எனக்கு வலியே இல்லை. முழங்கால் மூட்டுக்களில் படிந்திருந்த உப்புக்களைக் களிக்க சூரியசக்தி சிகிச்சை உதவியது என்பது சில மாதங்களுக்குப் பின நடத்தப்பட்ட சோதனைகளில் இருந்து தெரிந்தது நான் மீண்டும் வேலைக்குச் செல்லும் நிலையில் உள்ளேன்'' என்றார். [வா]

---

## தந்தை செல்வா சிராத்ததினம்

[சாவகச்சேரி]

''தமிழினத்தில் தோன்றிய ஒரே தீர்க்கதரிசி தந்தை செல்வாவேதான். அவரின்பின் வேறொரு தீர்க்கதரிசி இன்னமும் தோன்றவில்லை, மகாத்மா காந்தியின் கொள்கைகளையொட்டித் தனது சொந்த வாழ்க்கையையும் பொது வாழ்க்கையையும் அமைத்துக் கொண்ட தந்தை செல்வாவின் இடைவெளி இன்னமும் நிரப்பப்படாததால்தான் தமிழினம் இன்று தழம்பும் நிலையிலிருக்கின்றது''

இவ்வாறு சாவகச்சேரி மேன்முறையீட்டுச் சபையின் தலைவரான பண்டிதர், எஸ்.சிவலிங்கம், கைதடி வயோதிபர் இல்லத்தில் அறவழிப்போராட்டக்குழுவினால் ஒழுங்கு செய்யப்பட்ட தந்தை செல்வாவின் 9வது சிராத்ததின பிரார்த்தனை நிகழ்ச்சியில் உரையாற்றும் போது தெரிவித்தார்.

செயலாளர் க. ஜீவகதாஸ் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் அறவழிப்போராட்டக் குழுவினால், வயோதிபர் இல்லத்தில், சிரமதானம் மருத்துவ பரிசோதனை நூல்கள் வழங்கல் போன்றவை இடம்பெற்றன. வயோதிபர் இல்ல நோயாளிகளை டாக்டர் இ. சபாநாதன் பரிசோதனை செய்து மருந்துகளை இலவசமாக வழங்கினார்.

---

## தரகர் தொல்லை குறைந்தது

(பண்டத்தரிப்பு)

யாழ் மாவட்டத்திலுள்ள பிரபல சந்தைகளுள் ஒன்றான பண்டத்தரிப்பு சந்தையில் வரி வசூலிக்கும் பொறுப்பை இயக்கமொன்றைச்சேர்ந்த இளைஞர்கள் பெறுபேற்றதை தொடர்ந்து இச் சந்தையில் நீண்டகாலமாக நிலவிவந்த தரகர்களின் தொல்லை மிகவும் குறைந்துள்ளதாக ப்பகுதி விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர்.

---

### கந்தளாய் விவகாரத்தில் தீவிரவாதிகள் பங்கு:

# இந்தியக் குழுவிடம் இலங்கை பிரஸ்தாபிக்கும்

[லண்டன்]

இன்று இலங்கைக்கு விஜயம் செய்யும் இந்திய அரசின உயர்மட்டக் குழுவிடம் கந்தளாய் அணைஉடைப்பில் தமிழ் தீவிரவாதிகளின் சந்தேகிக்கப்படும் பங்கு பற்றி இலங்கை தரப்பினால் பிரஸ்தாபிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக பி பி ஸி தெரிவித்துள்ளது

கடந்த 20 ம் திகதி கந்தளாய் அணைஉடைப்பெடுத்ததும் இவ்வனர்த்தத்தினால் 60 பேருக்கு மேல் மாண்டதும் தெரிந்ததே இதனைத் தொடர்ந்து ஈழப் புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சி எனப்படும் அமைப்புத்தானே இவ்வுடைப்புக்குப் பொறுப்பாளி என இந்தியாவில் உரிமை கோரியிருந்ததும் தெரிந்ததே.

இது பற்றி தகவல் தெரிவித்த அரசியல் விமர்சனங்கள், ராஜதந்திர ரீதியில் மிகவும் நெருக்கடியான நிலையில் உள்ளஇலங்கை அரசுக்கு இது ஒரு சாதகமான கருத்தாக உள்ளது என்று கூறுகின்றனர். ஏனெனில் தமிழ்த் தீவிரவாதிகள் இந்தியாவிலிருந்து இயங்குகின்றனர் என்ற இலங்கைக் குற்றச்சாட்டை இது நியாயப்படுத்துவதாக உள்ளது என அவர்கள் கூறுகின்றனர்

இலங்கையின் இனப்பிரச்னை சம்பந்தமாக சில பேச்சுக்களை நடாத்துவதற்கு நிர்வாக சீர்திருத்தத்திற்கான இந்திய இணை அமைச்சர் திரு. பி சிதம்பரம் தலைமையில் குழு ஒன்று இன்று கொழும்பு வருகிறது.

---

# லலித்தின் கூற்றின்மீது சென்னையில் விவாதம்

## கருணாநிதி அறிவிப்பு

[சென்னை]

தமிழீழஆதரவாளர் அமைப்பின் மாநாடு அடுத்த மாதம் 4-ம் திகதி மதுரையில் அதன் தலைவர் மு கருணாநிதி தலைமையில் நடைபெறும்

இம்மாநாட்டின் போது, ''இலங்கை இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வு காணப்படாவிடில் இராணுவத் தீர்வையே இலங்கை அரசு நாடும்'' என்ற இலங்கை தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி விடுத்த எச்சரிக்கை உட்பட, இலங்கை இனப்பிரச்னை தொடர்பான பல்வேறு விஷயங்கள் பரிசீலிக்கப்படவுள்ளன.

இத்தவேளை இலங்கைஇனப்பிரச்னை குறித்து ஆலோசிக்கவென தமிழ்நாடுமுதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரன் கூட்டியிருக்கும் அனைத்துக்கட்சி மாநாட்டில் கலந்துகொள்ளுமாறு தி மு. க. தலைவர் மு கருணாநிதிக்கும் அழைப்புவிடுக்கபபட்டுள்ளது.

ஆனால் திரு. கருணாநிதி அன்றையதினம் சென்னையில்இருக்கும் வாய்ப்பில்லாததால் மாநாட்டில் கலந்துகொள்ள முடியாமலிருக்கும் என்று தெரிவித்துள்ளார். [பி]

---

## விழிப்புக்குழு

(வணணார்பண்ணை)

கொழும்புத்துறை எழிலூர் சனசமூகநிலையப் பகுதியில் விழிப்புக்குழு ஒன்று கடந்த ஞாயிறுக்கிழமை அமைக்கப்பட்டுள்ளது 'எழிலூர் விழிப்புக்குழு'' என்ற பெயரில் இயங்கும் இக்குழுவின் நிர்வாகிகளாக பின்வருவோர் தெரியப்பட்டுள்ளனர்.

காப்பாளர்: அருட் தந்தை ஸ்ரனிஸ்லஸ் அடிகள் தலைவர்: திரு இ. யேசுதாசன்(ரவி) உபதலைவர்: திரு வி. ரட்ணசிங்கம், செயலாளர்: திரு. யோ. மகேந்திரன், உபசெயலாளர்: திரு, செ. தங்கராஜா பொருளாளர்: ச. மரியநாயகம், உபபொருளாளர்: திரு வே. சிவஞானம், நால்வர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

---

# சமரசப் பேச்சை அடுத்து மறியல் கைவிடப்பட்டது

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க தலைமை அலுவலகத்திற்கு முன்னால் சேவை நீக்கம் செய்யப்பட்ட சங்க மின்தறி ஆலை ஊழியர்கள் நடாத்திவந்த தொடர்ச்சியான மறியல் போராட்டம் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற சமரசப் பேச்சுவார்த்தையை அடுத்து கைவிடப்பட்டது.

சங்கத் தலைவர் ஆ. யேசுதாசன் தலைமையில் இதுதொடர்பாக நடைபெற்ற பேச்சுவார்த்தையில் வர்த்தக ஊழியர் தொழிற் சங்கத்தின் பிரதிநிதிகள் கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கப பிரதிநிதிகள் சங்க இயக்குனர் சபை உறுப்பினர்கள் ஆகியோ கலநது கொண்டனர்

சேவை நீக்கம் செய்யப்பட்ட ஊழியர்களுக்கு 11 மாத சம்பளத்தை நஷ்ட ஈடாக வழங்குவது என்றும், அவர்கள் கடைசியாகப் பெற்ற மாதச் சம்பளத்தின் அடிப்படையில் இந்தநஷ்டஈட்டை வழங்குவது என்றும் மூன்று மாதகாலத்திற்குள் இந்த நஷ்டஈட்டை வழங்குவது என்றும் இந்த பேச்சுவார்த்தையில் இணக்கம் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

---

## இன்று

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் ஸ்ரீ கதிரமலை சிவன்கோவில் என அழைக்கப்படும் அருள் மிகு ஸ்ரீ பொன்னம்பலவாணர் ஈஸ்வரசுவாமி கோவில் மஹோற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது.

தினந்தோறும் விசேடமாக நிர்மாணிக்கப்பட்ட ஐந்து குண்டங்கள் விளங்குகின்ற மஹா யாகத்தில் இலட்சம் ஹோமங்கள் இலட்சம் நாமஅர்ச்சனைகள் நடைபெறவுள்ளன இந்த நிகழ்ச்சிகளின்போது திருமுறை ஓதுதலும், சமயச் சொற்பொழிவுகளும் இடம் பெறும்.

---

## சமாதானசபை

[மாவிட்டபுரம்]

மயிலிட்டி வடக்கு கிராம சேவையாளர் பிரிவு சமாதான சபை நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவாகினர்.

தலைவர். திரு. நா சுந்தரலிங்கம், உபதலைவர். திரு. த சின்னராசா, செயலாளர், திரு சிவஏழுமலை, உபசெயலாளர் திரு. எம் .சின்னையா பொருளாளர். திரு. மு முத்துராஜா.

கணக்காளர்கள். திரு செ. மோகன் திரு அ பத்திநாதன், கணக்குப்பரிசோதகர் திரு. நா, சின்னராசா' ஆலோசகர்கள் திரு பா. வேணுகோபாலன், திரு. செ. சந்தானம்

9பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

### மணி வாக்கு

ஞானிக்கோ பேரறிஞருக்கோ அளிக்கும் கௌரவம்,
கௌரவிப்பவர்களுக்கே பெருநன்மை பயக்கும்.
—எபிக்கியூறஸ்.

## நமது நோக்கு

# யார் இந்த சமூக எதிரிகள்?

**யாழ்.** மாவட்டமும்-குறிப்பாக யாழ். நகரமும் இன்று என்ன இக்கட்டுகள் மத்தியில் இயங்கி வருகிறதென்பதை உணர முடியாத மனித மிருகங்கள் உண்டா?

யாழ். மாநகர ஆணையாளர் விடுத்திருக்கும் எச்சரிக்கையே இந்த வினவை எழுப்பத் தூண்டுகிறது.

யாழ். மாநகரசபை ஊழியர்கள் இன்று எவ்வித அபாய சூழ்நிலையில் தங்கள் தங்கள் கடமைகளைப் புரிய வேண்டியிருக்கிறதை நாம் இங்கு விரித்துவிளக்கவேண்டியதில்லை. தினசரி உயிருக்கு ஆபத்தான சூழ்நிலையில் ஊழியர்கள் எவரும் இப்பகுதியில் நடமாடுவதை நாம் கண்ணாரக் காண்கின்றோம்.

இந்த நிலையில், சட்ட விரோதமாக மின்சார பாவனை நடத்தும் பேர்வழிகள் அதனைத்தடுக்கச்சென்ற ஊழியர்களைத் தாக்குவதானால் அது குற்றத்துக்குரிய வன்செயல் மட்டுமல்ல சமூக விரோதமான இழிவென்பதை நாம்வற்புறுத்த வேண்டியிருக்கிறது.

கடமையைச் செய்வதே கடவுள்வழிபாடு. ஆனால் இன்றைய இருளில் கடமையை நிறைவேற்றுவது உயிருக்கு ஆபத்தாக இருக்கும் வேளையில் சுயநலம் படைத்தவர்கள் தங்களுக்கு மட்டுமல்ல, தங்கள் சுற்றுடலுக்கே அகவிருள் போதாதென்று புறஇருளையும் புகுத்திவிட முயல்கின்றனர்.

ஒரு இரவில், ஒரு சிறு மணித்தியாலங்கள் நகரம் இருளில் மூழ்கியிருப்பது எத்துணை அபாயங்களுக்கு இடமளிக்குமென்பதை அறிந்தநாம் இன்றுவது திருந்தாவிட்டால் எங்கள் சமூகத்துக்கு நிவாரணம் கிட்டுமென்று. காத்திருப்பது வெறும் முட்டாள்தனம்.

எக்காலத்திலும் நகரத்தின் பிரஜைகள் ஒத்துழைப்பின்றி இப் பெருநகரம் செவ்வனே நிர்வகித்தல் அரிது. எனவே இன்று எல்லாப் பக்கங்களிலும் நெருக்கடியே நிமிர்ந்துநிற்பதால், யாழ். மாநகர ஆணையாளரின் எச்சரிக்கை சரியானதென்பதை உணர்ந்து, எல்லாவகையிலும் மக்கள் ஒத்துழைப்பு தங்குதடையின்றி நல்குவது அத்தியாவசியமென்று நாம் விளக்கவும் வேண்டுமா?

# யாழ். இஸ்லாமிய கல்வி முன்னேற்றம்

**அ**ண்மையில் யாழ். ஒஸ்மானிய க் கல்லூரியில் நடந்த மாநாடொன்றில் இஸ்லாமிய பாடசாலைகளின் பொதுவான குறைபாடுகள் ஆராயப்பட்டதென்ற செய்தி வெளியிடப்பட்டிருக்கிறது.

கல்வியில் யாழ். மாவட்டமே நாட்டின் சிறந்த பகுதியென்ற நெடுங்கால நம்பிக்கை இன்றும் அந்நிலையில் இருக்கிறதா என்ற ஐயம் எழுகிறது. அரசின் பாகுபாடு எத்தகையதானாலும், பிச்சை புகினும் கற்கை நன்றே என்ற கொள்கை யாழ்ப்பாணத்தை இலகுவில் விட்டகலாது.

இந்தப் பின்னணியில் கல்வியில் முன்னேற்றம் காண விழையும் இஸ்லாமிய சகோதரர்கள் யாழ்ப்பாணப் பாரம்பரியத்தின் பிரிக்கமுடியாதபகுதியினர். எனவே இஸ்லாமியபாடசாலைகளுக்கும் ஏனைய தமிழ்ப் பாடசாலைகளுக்கும் சமானமின்மை தொடர்வது எவ்விதத்திலும் தகாதநிலை.

பண்டைய நிலையில் பாடசாலைக் கல்வி இஸ்லாமிய சமூகத்தில் பரவியிருக்கவில்லை. இருப்பினும் அறிஞர்கள் அப்துல் அஸீஸ் சீசிஎஸ், டாக்டர் எம். எச். எம். அப்துல்காதர், இளைப்பாறிய நீதியரசர் எம். எம். அப்துல் காதர் போன்ற பெரியார்களை நாட்டுக்கு வழங்கிய யாழ்ப்பாணம் இன்று அவர்களின் கல்வி வளர்ச்சியடைய பின்னிற்க வேண்டியதற்கு நியாயமில்லை.

அரசியல் சூழ்நிலை எவ்வித சிக்கலை வேறெங்கும் ஏற்படுத்தமுடிந்தாலும் யாழ்ப்பாண இஸ்லாமிய மக்கள், தமிழ் மக்களின் உடன்பிறவாச் சகோதரர்கள் என்பதைப் பொய்ப்பிக்க எவராலும் முடியாது.

இன்றைய வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் கலைமலிந்த இணுவிலைச் சேர்ந்தவர். அண்டை ஊராகிய சுதுமலையில் வாழ்ந்து பிரபலம் பெற்ற வைத்தியர் அண்ணாமலையைப் போல, நோயாளிகளைத் தம்மிடம் அழைக்காது அவர்களைத் தாமே நேரில் அணுகிப் பரிசோதிக்கும் முறையைக் கடைப்பிடிப்பதாக பாராட்டப்படுகிறார்.

கல்வி கரைகடந்து வளர வேண்டுமானால் ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஒரே சுதியில் சேர்ந்து பாட வேண்டும்.

கல்விக்குரிய சூழ்நிலையையும் வசதிகளையும் உருவாக்குவதில் அரச நிர்வாகத்துக்குப் பெரும் பொறுப்புண்டு.

நிர்வாகப் பரவலாக்கலில் வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் ஒரே கேந்திர ஸ்தானத்தை வகிக்கிறார். அலுவலகத்தில் ஆறி அமர்ந்திராது களத்தில் இறங்கி ஆவன செய்யத்துடிக்கும் புதிய பணிப்பாளரின் முயற்சிகள் இஸ்லாமிய கல்விக்கு முன்னேற்றமளிக்கவேண்டும்.

# இலக்கணசுவாமிகள்என்னும்

## ஸ்ரீமத் முத்துக்குமாரத்தம்பிரான்

**எ**திர் வரும் சித்திரை மாதம் 20 ம் திகதி சனிக்கிழமை [3-5-86] சுவாமிகளின் குருபூசை தினமாகும். குருபூசையை முன்னிட்டு 1958 ம் ஆண்டு வெளியிடப்பட்ட இவரின் நினைவு மலரில் சில பெரியோர்களினால் எழுதப்பட்ட சில கட்டுரைகள் இன்று தொடங்கி இப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்.

'ஆண்டவனைவழிபடுவதைக் காட்டிலும் அடியாரை வழிபடுவது சிறந்தது. ஆண்டவனை வழி படுவோர்க்கு ஒரு பலன். அடியாரை வழிபடுவோருக்கு இரட்டைப் பலன். ஏன்? அடியார்கள் உள்ளக் கோயிலில் ஆண்டவன் உறைகின்றான் ஆதலின் அடியார் வழிபாடு உயர்ந்தது என்றுணர்க.

ஆண்டவனுக்குத் தந்த ஒன்று அடியார்க்குச் சேராது. அடியார்க்குத் தந்தது ஆண்டவனைச் சேரும். அஞ்சல் தலைமையகத்தில் இட்ட அஞ்சல் அஞ்சல் பெட்டிக்கு வராது. அஞ்சல் பெட்டியில் இட்ட அஞ்சல் தலைமை நிலையத்துக்கு சேர்ந்து விடும். அஞ்சல் தலைமை நிலையம் இறைவன்; அஞ்சல் பெட்டி அடியார்கள் என்றுணர்க.

''படமாடக் கோயில் பரமர்க்கொன் றீயின்
நடமாடக் கோயில் நம்பர்க்கங் காகா
நடமாடக் கோயில் நம்பர்க்கொன் றீயின்
படமாடக் கோயில் பரமர்க்கங் காமே''

என்பார் திருமூலர்.

ஆண்டவனுக்குச் செய்கிற வழிபாடு ஆராதனை எனப்படும் அடியார்க்குச் செய்கிற வழிபாடு சமாராதனை எனப்படும். சம் ஆராதனை- சமாராதனை. சம்-நன்றாக; ஆராதனை வழிபாடு. நன்றாக வழிபட்டது சமாராதனை.

ஆதலால் காதலால்அடியார்க்குச் செய்யும் வழிபாடு மிக மிகச் சிறந்த பயனை நல்கும்,''

திருமுருக
கிருபானந்தவாரியார்

சைவப் பெரியார் ஸ்ரீமத் இலக்கணம் முத்துக்குமாரத்தம்பிரான் சுவாமிகள் சிதம்பரத்தில் மாலைகட்டித் தெருவில் மெய்கண்ட வித்தியாசாலையில் விரோதி வருஷம் சித்திரை மாதம் 10ந் திகதி 22-4-49 தசமி அவிட்டநாள் கூடிய வெள்ளிக்கிழமை பகல் 10.30 மணியளவில் அம்பலவாணர் திருவடி அடைந்தார்கள். அவர்களதுமறைவு சைவ உலகத்திற்கு பெருத்தநட்டமாகும் அவர்கள் தமிழ்மொழி வடமொழி இரண்டிலும் நிரம்பிய புலமை வாய்ந்தவர்கள். அதனோடு சைவசித்தாந்த சாஸ்திரங்களை துறைபோக ஐயந்திரிபறக் கற்றவர்கள்.

இலங்கை- வண்ணார்பண்ணையில் பரம்பரைச்சைவவேளாளர் மரபில் அவதரித்த இவர்கள் 14 வயதளவில் தமது நாட்டினைவிட்டு இந்நாட்டுக்கு வந்துவிட்டார்கள். அதன்பின் இதுவரை தமது இலங்கை நாட்டுக்குச் சென்றதில்லை. இங்கு வந்தகாலமுதல் சைவ சந்நியாச விதிப்படி துறவு பூண்டு பானுகோயில் என்று வழங்கும் சூரியனார் கோயில் சிவாக்ரயோகிகளாதீனம் குருமூர்த்திகளாகச் சிறந்து விளங்கிய ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமாரசுவாமி தேசிகர்பால் முறையே முத்தீக்கையும் பெற்றுத் தமிழ் இலக்கிய இலக்கணங்களையும் சைவசித்தாந்த சாத்திரங்களையு முறைப்படி உபதேசிக்கப் பெற்றனர். வடமொழிப் பயிற்சியும் அத்தேசிகர்பால் பெற்று விளங்கினர். சந்நியசம் பூண்டு பிட்சை செய்து கொண்டு அநேகவருஷங்கள் வித்தைகள் பயின்றனர்.

நிரம்பிய கல்வியும் ஞானமும் பெற்று விளங்கினரேனும் சிறிதும் ஆடம்பரமில்லாத தூயதவ ஒழுக்க வாழ்க்கை வாழ்ந்தனர். தவத்தால் மெலிந்த திருமேனியுடையவர் அவர்களது பெருமுயற்சியாலே சிவ ஞானபாடியம் முழுவதும் அச்சில் வெளிவந்து ஞானந்தமிழுலகம் வீறுகொண்டு விளங்கக் காரணமாயிற்று.

சிவாக்ர பாடியம், சைவ சந்நியாச பத்ததி, திருநாரையூர்ப்புராணம் முதலிய பல நூல்கள் தமிழிலும்வடமொழியிலும் வெளிப்படுத்தியவர் இவர்களாவார். தம்மை வந்தடைந்த பக்குவப்பட்ட நன்மாணக்கர்கள் பலருக்கும் சைவசாத்திரங்கள் இலக்கண, இலக்கியப், பாடங்கள் சைவபுராணங்கள், இவற்றை முறையாகப் பாடம்சொல்லிப் பயிற்றுவிப்பார்கள். யான் எழுதி வெளியிட்டு வரும் பெரியபுராண உரைக்குப் பேராதரவாய் 'எல்லா வகைகளாலும் ஊன்றுகோலாக உதவி வந்தனர் நாடோறும் தவறுதுசிவ பூஜை நியமம் உடையவர்கள் ஒன்றிரண்டு நாட்களே நோய்வாய்ப்பட்டு இருந்து சமாதியடைந்தார்கள் இவர்களது இன்னுயிர் இறைவர் திருவடி கீழ் இன்புற்றமர்வதாக.

சிவக்கவிமணி
சி. கே. சுப்பிரமணிய
முதலியார்

மேதினத்தில்

# "ஈழமெங்கும் கண்டன ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் நடைபெறும்"

## ஈ பி. ஆர். எல். எவ். அறிக்கை

(யாழ்ப்பாணம்)

''இவ் வாரம்ஈழப் பிரதேசமெங்கும் கண்டன ஊர்வலங்களும், ஆர்ப்பாட்ட ஊர்வலங்களும் நடைபெறும். ஏனையவிடுதலை இயக்கங்களும் முற்போக்கு சகதிகளும் சகல மக்களும் இக்கண்டன வாரத்தில் பங்கேற்குமாறு வேண்டுகின்றோம்.''

இவ்வாறு ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ பி. ஆர். எல்.எவ்.) மேதினத்தையொட்டி விடுத்துள்ள அறிக்கை யொன்றில் தெரிவித்துள்ளது

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது

''தமது உரிமைகளுக்காக சிக்காகோ நகரவீதிகளில் ஊர்வலம் நடத்தியபோது அமெரிக்க வின் கூலிப்பட்டாளங்கள் அன்று பல உழைக்கும் மக்களைத் தனது துப்பாக்கிகளுக்கு இரையாக்கியது. அதே துப்பாக்கித் துயரத்தினம் 100 ஆண்டுகளாக இன்றும் தொடர்ந்து கொண்டே இருக்கின்றது.

அமெரிக்க ஏகாதிபத்தியமானது உழைக்கும் மக்களின் எழுச்சிகளை அடக்க கோடிக் கணக்கான டாலர்களைச் செலவு செய்வதுடன் இதற்கான நவீனரக போர்த்தளபாடங்களையும் செய்து குவிக்கின்றது. தமது உரிமைகளுக்காகவும் சுதந்திரத்திற்காகவும் விடுதலைக்காகவும் போராடும் சகலதேசத்து மக்களும் நேரடியாகவும் மறைமுகமாகவும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நச்சுக்கரங்களால் நசுக்கப் படுகின்றார்கள். பயங்கரவாதத்துக் கெதிராகப் போராடுவதாக முழங்கும் அமெரிக்க ஏகாதிபத்தியம் தனது அரசு பயங்கரவாதத்தி மூலம் எத்தனையோ கோடிமக்களை இதுவரை பலி கொண்டுவிட்டது

''வியட்னாமில் எத்தனை லட்சம் மக்கள் பலியானார்கள். கிறெனடாவில், சிலியில், நிக்கரகுவாவில் நடைபெற்றது, நடைபெறுவது என்ன? இவர்கள் எல்லாம் பயங்கரவாதிகளா? தமது நாட்டின் விடுதலைக்காகவும், சுதந்திரத்திற்காகவும் போராடும் மக்களைக் கொன்றொழிப்பதிலேயே அமெரிக்க ஏகாதிபத்தியம் கண்ணும் கருத்துமாக உள்ளது.

''இன்றைய றீகன் நிர்வாகமானது சுதந்திரமும், தன்னுக்கமும் உடைய லிபியக்குடியரசின் மீது ஆக்கிரமிப்பு யுத்தத்தை மேற்கொண்டுள்ளது. இது சர்வதேச நாடுகள் அனைத்துக்குமான அச்சுறுத்தலாகும்.

''இன்று இலங்கையில் நடப்பது என்ன? தமது விடுதலைக்காகப்போராடும் ஓர் மக்கள் கூட்டம் சிறிலங்கா அரசால் அழித்தொழிக்கப்படுகிறது. இலங்கையில் நடப்பது இனப்படுகொலை என இந்தியாவும். ஏனைய உலகநாடுகளும் கூறுமளவிற்கு இங்கு இனச்சங்காரம் நடக்கிறது. யாரின் உதவியுடன் இது நடக்கிறது? அமெரிக்க ஏகாதிபத்தியத்தினதும், அதன் கைப்பொம்மைகளான நாடுகளின் உதவியுடனும் இப்படுகொலைகள் இங்கு நிகழ்த்தப்படுகின்றன.

''தமது உரிமைகளுக்காக சாத்வீக வழியில் போராடி அவை யாவும் அரசின் ஆயுத பலத்தால் அடக்கப்பட்டபின்னரே நாம் ஆயுதம் ஏந்தத் தொடங்கினோம். நாம் பயங்கரவாதிகளாக அரசின் கண்களுக்குத் தெரிகிறது. அதே சமயம் பொதுமக்களைப் படுகொலை செய்யும் ஸ்ரீலங்கா அரசு மாத்திரம் பயங்கரவாதிகள் இல்லையாம்.

''உழைக்கும் மக்களின் உரிமைக்காகப் போராடும் நாம் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கெதிராகவும், அவர்களது கைப்பொம்மைகளான நவ பாசிச, சியோனிச, நிறவாத அரசுகளுக்கெதிராகவும் போராட வேண்டியுள்ளது.

''மே தினத்தின் 100-வது ஆண்டு நிறைவையும் அதனை அடுத்துவரும் வாரத்தையும் 'கண்டன வாரமாக' ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி பிரகடனப்படுத்துகிறது.

''ஸ்ரீலங்காவில் உள்ள இடதுசாரி, முற்போக்கு சக்திகளும் இவற்றுக்கெதிரான போராட்டத்தை முன்னெடுக்கவேண்டுமென அறை கூவல் விடுக்கின்றோம்.''

(ஐ)

# இன்று கருத்தரங்கு

(உடுவில்)

மானிப்பாய் வட்டாரத்திலுள்ள பாடசாலை அதிபர்கள் பாட ஆசிரியர்களுடனான கலந்துரையாடலொன்று இன்று உடுவில் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

[7ம் பக்கம் பார்க்க]

## இம்முறை...

(1ம்-பக்கத் தொடர்ச்சி)

யோரையும், த.வி கூ. பிரமுகர் நீலனையும், எதிர்க் கட்சித் தலைவர் அநுரா பண்டார நாயகா, அவரது தாயார் திருமதி சிறிமாவோ பண்டார நாயகா ஆகியோரையும் சந்திப்பர் என எதிர்பார்க்கப்படுகிறது.

### வெள்ளிவரை

இக்குழுவினர் மே மாதம் 2-ம் திகதி வெள்ளிக்கிழமை வரை கொழும்பில் தங்கிப் பேச்சுக்கள் நடத்துவர். ஆயினும் அவசியமேற்படின் இவ் விஜயத்தின் கால எல்லையை அவர்கள் நீடிக்கக்கூடும்.

### கடைசிச் சந்தர்ப்பம்

இலங்கையின் இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வொன்றினை ஜனாதிபதி ஜயவர்த்தன காண விரும்பினால் அதற்கு இதுவே கடைசிச் சந்தர்ப்பம் எனவும் தமிழ் மக்களின் அபிலாஷைகளைத் தீர்த்துவைக்கக்கூடிய எதையும் வழங்க ஜனாதிபதி தொடர்ந்து மறுத்தால் இந்தியா தனது மத்தியஸ்த முயற்சிகளை நிறுத்திக் கொள்ளலாம் எனவும் அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றது.

அத்துடன், தமிழரான திரு சிதம்பரத்தை இக்குழுவுக்குத் தலைவராக நியமித்ததின் மூலம், தமிழர் பிரச்னையில் இந்தியா சார்பில் தமிழரல்லாத ஒருவரே நடுநிலைமையாக நின்று பேசக்கூடியவர் என்ற இலங்கையின் கருத்தை இந்தியா தகர்த்துள்ளது எனவும் இவ் வட்டாரங்கள் கூறுகின்றனர்.

உண்மையாகக் கூறப் போனால் இக்குழுவின் பின்னணியில் தமிழர்களே இயங்குகின்றனர் என அவ்வட்டாரங்கள் கூறுகின்றன.

குழுவில் அங்கம்வகிக்கும் திரு ரஞ்சன்மத்தாய் கேரளத்தைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## இலங்கை..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திருமதி பரராஜசிங்கம் பேசுகையில், கடவுள்மேலுள்ள நம்பிக்கை, உண்மையான வாழ்க்கை என்பனவே தந்தை செல்வநாயகத்துக்கு 'ஈழத்துக் காந்தி' என்ற நாமம் ஏற்படக் காரணமாகியது என்றார்.

தந்தை செல்வா ஞாபகார்த்த நிதியத்தின் செயலாளர் திரு. எஸ். நடராசாவும் பேசினார். [ஐ]

## புதிய யோசனை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திரும்பிய திரு. அமிர்தலிங்கம் இலங்கை அரசின் புதியயோசனை பற்றி இவ்வாறு கருத்துத் தெரிவித்தார்.

''முன்னர் த.வி. கூ. சமர்ப்பித்த ஆலோசனைகளுக்கு இலங்கை அரசின் பதில் சாதகமாக இருக்கவில்லை. ஆயினும் இம்முறை அரசாங்கத்தின் ஆலோசனைகள் நம்பிக்கைதருவனவாக உள்ளன. அதனாலேயே முன்னர் ரத்துசெய்யப்பட்ட பண்டாரியின் விஜயம், தமிழ் அமைச்சரான திரு. சிதம்பரத்தின் தலைமையில் ஆரம்பித்துள்ளது'' என்று அவர் கூறினார்.

### ஆயினும்......

இந்தியக் குழுவின் இவ் விஜயத்தில் தாம் அதிகளவு நம்பிக்கை வைக்கவில்லை என்றும் ஏனெனில் கடந்த காலங்களில் தமிழ்மக்கள் பலதடவைகள் இலங்கை அரசாங்கங்களினால் ஏமாற்றப்பட்டு வந்துள்ளனர் என்றும் திரு. அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

அதிகாரப் பரவலாக்கல் பற்றி திரு. அமிர்தலிங்கம் பிரஸ்தாபிக்கையில் இலங்கையின் வடக்கு-கிழக்குப் பகுதிகளில் வாழும்தமிழ் மக்கள், ஒன்றிணைக்கப்பட்ட ஒரு மாநிலத்தினுள் வாழும் உரிமையைப் பெறவேண்டும் எனத் தாம் இந்தியாவிடம் திட்டவட்டமாகக் கூறிவிட்டதாகவும், அத்துடன் இந்த மாநிலத்தின் அதிகாரங்கள் பற்றிய தங்கள் கோரிக்கையையும் இந்திய அரசிடம் தெரிவித்துள்ளதாகவும் கூறினார்.

பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படுமுன்னர் தமிழர்களின் கொலைகள் நிறுத்தப்படவேண்டும் எனத் தாங்கள் கோரியிருப்பதாகவும் அமி மேலும் கூறினார். [ய-செ]

## பளுகாமம்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுப் பிற்பகல் களுவாஞ்சிக்குடி அதிரடிப்படை முகாமில் இருந்தும் அக்கரைப்பற்று முகாமிலிருந்தும் இருபிரிவினராக அதிரடிப்படையினர் நடந்து சென்னர். முகாம் அமைப்பதற்கான உபகரணங்களுடன் ட்ரக்டரும் கூடச் சென்றது அங்குவைத்துப் போராளிகள் அதிரடிப்படையினரை நோக்கிக் கைக்குண்டுகளை வீசியதுடன் துப்பாக்கி பிரயோகமும் செய்தனர்.

இருபகுதியினருக்குமிடையே பலமணிநேரமாக நேரடி மோதல் இடம்பெற்றது.

பிற்பகல் 4-30 மணியளவில் நேரடிச்சமர் இடம் பெற்ற இடத்துக்கு இரு குண்டுவீச்சு விமானங்கள் சென்று குண்டுகளை வீசின.

## ராஜீவை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ரப் பரவலாக்கல் செய்வதன் மூலம் இலங்கையின் இனப் பிரச்னையைத் தீர்வுகாண இந்தியாவின் நல்லெண்ண முயற்சிகளைப் பயன்படுத்துவதுபற்றி இச்சந்திப்புகளில் விவாதிக்கப்பட்டுள்ளது.

இச்சந்திப்புகளின் போது வெளியுறவுச் செயலர் திரு. ஏ. பி. வெங்கடேஸ்வரனும் கலந்து கொண்டார். [செ]

ஹெலிகொப்டரிலிருந்தும் துப்பாக்கிப்பிரயோகம் செய்யப்பட்டன.

இச்சம்பவத்தில் இறந்தவர்களின் சதவிபரம் பற்றி எதுவும் தெரியக்கப்படவில்லை. (மா)


# "அனிற்ரு ஸ்கூல் ஒவ் டிரஸ் மேக்கிங்"

பூநாறி மரத்தடி - கொக்குவிலில் எம்மால் 27 - 04 - 86 தொடக்கம் நடாத்தப்பட்டுக் கொண்டிருக்கும் கேக், ஐசிங், தையல், சிகை அலங்காரம் ஆகியவற்றின் கண்காட்சி பார்வையாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க இன்று 29 - 04 - 86 செவ்வாய்க்கிழமை வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

அதிபர்,

திருமதி பவளம் சிவசுப்பிரமணியம்.

(C 2061)



# புனிதமான இயக்கங்களுக்கோர் உருக்கமான வேண்டுகோள்

ஏப்பிரல் 12 ம் திகதி இனந்தெரியாத நபர்களால் எனது M. B. 100 இலக்க 86 ஸ்ரீ 8366 Honda மோட்டர் சைக்கிள் எடுத்துச் செல்லப்பட்டது இரத்தஅமுக்கத்தினாலும், மற்றும் நோய் உபாதைகளினாலும் அவதிப்படும் எனக்கு பெரிதும் உதவிய இந்தசைக்கிளை காருண்ய சிந்தையுடனும், மனிதாபிமானத்துடனும் திருப்பித்தந்துதவுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

க. இ. வீரசிங்கம்.

உடுவில் தெற்கு,
பாலாவோடை,
மானிப்பாய்.

(C 2057)


## 3-வது ஆண்டு நினைவஞ்சலி



### விசுவலிங்கம் அமிர்தலிங்கம் (அமுது)

(கொழும்பு P. B. உம்பிச்சி லிமிட்டெட் ஸ்தாபனத்தின் காசாளர்)

மலர்வு: 24-11-1955

உதிர்வு: 23-07-1983

அணையாத சோதியாய் திகழ்ந்த எமது அன்புத் தெய்வமே!

கண்ணிலே உறக்கம்
அற்றோம்,
கருத்தினிலே மாற்றம்
உற்றோம்,
எண்ணிடு பலவும்
அற்றோம்,
இங்கினி என்ன உண்டு.

மண்ணினிலே மடிந்தாய்
அந்தோ,
மதிப்பரு துயரும்
உற்றோம்,
விண்ணினில் வாழ்ந்தே
என்றும்,
விருப்புற அருள்
செய்வாயே.

சாந்தி, சாந்தி, சாந்தி.

அன்பு அப்பா, அம்மா, சகோதரி, சகோதரர்கள், மைத்துனர், மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.

தகவல்: அன்னாரின் அன்புச் சகோதரர்,
வி. தேவமனோகரன்.
மணிபல்லவம்,
புங்குடுதீவு-11. C 2055

## 1-வது ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் சுப்பிரமணியம் நேசதுரை

பூமிதனில் அன்புருவாய் அவதரிப்பு:
06-04-1952

ஆளுகின்ற அரக்கரினால் உயிர் பறிப்பு:
09-05-1985

பன்னிரண்டு திங்கள் தான் பறந்துமே போச்சுதைய, பக்கத்தில் நீரிருக்கும் பசும் நினைவே தோன்றுதையா, இன்னும் எத்தனையோ திங்கள்தான் பறந்தோடிப் போனாலும் எம்மிதயக் கோயிலிலே என்றும் நீர் நிறைந்திருப்பீர். பாவிகளின் கொடும் செயலால் பரனடிதான் சேர்ந்து விட்டீர். பாதைதனைப் பார்த்து நிதம் பரதவித்தே வாடுகின்றோம். பாச ஒளியாய் நிறைந்து இல்லம் சிறக்க வைத்தீர், என்றும் ஜீவ ஒளியாய் இருந்து எங்களை நீர் காத்திடுவீர். அனுதினமும் உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்,

அன்பு மனைவி,
பிள்ளைகள்,
உற்றார், உறவினர்.

ஆஸ்பத்திரி வீதி,
சங்கானை. C 2060

## நன்றி நவிலல், அந்தியேட்டி அழைப்பு



### முத்தையா இராமகிருஷ்ணன்

தோற்றம்: 23-07-1930

மறைவு: 27-03-1986

எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாத்துயில் கொண்ட எமது அன்புத் தெய்வத்தின் இறுதிச் சடங்கில் கலந்துகொண்டவர்கட்கும், அனுதாபச் செய்தி அனுப்பியவர்கட்கும் மற்றும் பல வழிகளில் உதவிபுரிந்தவர்கட்கும் எமது உளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அந்தியேட்டிக் கிரியைகள் (26-4-86) சென்னை திருவான்மியூர் மருந்தீஸ்வரர் (சிவன்) ஆலயத்தில் நடைபெற்றது.

மனைவி, மக்கள்,
மற்றும் உறவினர்கள்.

A 629


லிடோ Jaffna
10-30, 2-30, 4-30 6-30
BODY AND SOUL
(Colour)



2வது மாதம்
வெலிங்டன்
10-30, 2-30, 6-15
சிவகுமார், மோகன்
அம்பிகா, கவுண்டமணி
நடித்த
நான் பாடும் பாடல்
(கலர்)



# விக்னு டியூசன் சென்ரர்

52, ஸ்ரான்லி றேட், யாழ்ப்பாணம்.

[வடமாகாணத்தில் கலை, வர்த்தக, வகுப்புக்களுக்கு தனித்துவம் பெற்ற ஒரேயொரு நிறுவனம்.]

A/L 88 புதிய பிரிவு 2

ஆரம்பம்:- 04-05-1986

மு. குறிப்பு:- 4-ம் திகதிக்கு முன்னர் உங்கள் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

[A-465]




# டென்மார்க் பிரயாண ஒழுங்கு

எமது முகவர் 6-ம் திகதி பிரயாணிகளை அழைத்துச் செல்கிறார். பிரயாணம் செய்ய விரும்புவோர் உடன் தொடர்புகொள்ளவும்.

அத்துடன்: பாஸ்போட் விஸா, பொண்ட் என்பன உடனுக்குடன் செய்து கொடுக்கப்படும்.

யூனிவேசல் ஏஜென்சி,
[பெற்றோலியம் கூட்டுத்தாபனம் முன்பாக]
125 (455), ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

[C-2058]



தாவடி ஸ்ரீ வடபத்திரகாளி அம்மன் தேவஸ்தான மஹோற்சவத்தில், மகோற்சவக்குரு, கிரியாஜோதி, சிவச் செம்மல் ருமணி சிவஸ்ரீ ஞானசம்பந்த ஜோதிநாத குருக்கள் அவர்களை 24-ம் திகதியன்று உர்சவ பூர்த்தி விழாவில் தாவடியூர் மக்களால் பீடாரோஹணம் செய்யப்பெற்று அழைத்து வருகையில் எடுக்கப்பட்ட படம்.

# அ.தி.மு.க.மேதினஊர்வலம் திட்டமிட்டபடி நடக்கும்

[யாழ்ப்பாணம்]

திட்டமிட்டபடி யாழ் நகரில் அண்ணு தி. மு க. அனுசரணையுடன 15 கூட்டமைப்புக்களின் மேதின ஊர்வலம் நடத்துவதென்று . இலங்கை அண்ணு தி மு.க செயலகத்தில் நேற்றுமாலை நடந்த கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

கூட்டமைப்புக்குழுச் செயலாளரான திரு. பொன் மதிமுகராசாவின் இடத்திற்கு திரு. அலோசியஸ் தற்காலிக செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டார்.

தற்காலிக செயலாளர் திரு. அலோசியஸ் கூட்டமுடிவில் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

திரு பொன்.மதிமுகராசா வெகுஜன அமைப்பின் ஆணிவேராக இயங்கியவர். இவர் அனைத்து அரசியல் அடக்குமுறைக்கும் எதிராக அல்லும் பகலும் உழைத்தவர். பொருளாதார நிலையிலும் கூட மிகவும் சாமானிய மானவர் இவ்வமைப்புக்குழுவும், தமிழ்ப் பொதுமக்களும் அவரது சார்பை நன்கறிவர். பலகுழந்தைகளுககுத்தந்தையாகிய அவரது குடும்ப நிலைக்கும் அன்னரது பொதுத் தொண்டுக்கும் மதிப்பளித்து அவரை உடனடியாக விடுதலை செய்யுமாறு சம்பந்தப்பட்டவர்களை பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

மேதின விழா திட்டமிட்டபடி சிவன்பண்ணை அ தி.மு.க தலைமைச் செயலகத்தில் இருந்து பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகி மேற்குறிப்பிட்ட இடத்தில் கூட்டம் நடைபெறும்.

# செய்திச்சிதறல்

## கண்டனம்

(யாழ்ப்பாணம்)

''சின்னஞ்சிறு நாடான லிபியாவின் மீது நடந்த விமானத் தாக்குதல் ஹீரோசிமா நாகசாக்கியில் அமெரிக்க ஏகாதிபத்தியம் நடாத்திய அணுக் குண்டு தாக்குதலை அடுத்து அந் நாடு மேற் கொண்ட மிகக் கொடூரமான தாக்குதல் இதுவென்று மதிப்பிடப்பட்டுள்ளது மேலும் கிரெனடா தீவை ஆக்கிரமித்த பின்பு அமெரிக்காவால் மேற் கொள்ளப்பட்ட அடுத்த தாக்குதல் இதுவாகும் ''

இவ்வாறு இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ் மாவட்ட அங்கத்தவர்கள் பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் கூறுகிறது.

அத் தீர்மானத்தின் மீது பேசிய மாவட்டச் செயலாளர் திரு பொன் குமாரசுவாமி ஆத்திரமூட்டும் இச்செயலை இலங்கை அரசு வன்மையாகக் கண்டிக்காது இராசதந்திர ரீதியில் கவலை மட்டும் தெரிவித்துள்ளது எனக் கண்டித்தார்

## இன்னமும் நியமனமில்லை

[கிளிநொச்சி]

1977 ம் ஆண்டிற்குப் பின்பு பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்ற பல தமிழ்ப் பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனம் வழங்கப்படாததையிட்டு கலலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

''இவ்வாறு பட்டம் பெற்றுப் பட்டதாரியானோர் கஷ்ட சூழ்நிலைகளில் பின் தங்கிய பகுதிகளில் வாழ்பவர்கள் என்றும் இதனல் பலர் பட்டதாரிகளை பதிவு செய்யும் பகுதியில் பதிவு செய்யத் தவறியவர்கள் எனவும் மற்றும் சிலர் பதிவு செய்தும் விலாச மாற்றம் போக்கு வரத்து சீர் குலைவு முதலான காரணங்களால் தொடர்புகளற்று இருப்பவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறானவர்கள் தமது நிலையை விளக்கி சம்பந்தப்பட்டவர்களுக்கு பல கடிதங்கள் எழுதியும் பதில் இல்லை எனவும் புகார் செய்யப்பட்டுள்ளது.

## நெடுந்தீவில் கடும் வறட்சி

(நெடுந்தீவு)

நெடுந்தீவுப் பகுதியில் கடும் வறட்சி நிலவுவதால் குடி தண்ணீருக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. நெடுந்தீவு மத்தி, நெடுந்தீவுக் கிழக்குப் பகுதிகளில் உள்ள நன்னீர் சுனைகளான மணற்காடு. முருகன் கோவில் பகுதிக் கிணறுகள் கடும் வறட்சியினல் உவர் நீராக மாறியுள்ளது.இதனல் பெருந் தொகையான மக்கள் நெடுந்தீவு மேற்கு வெல்லை, சாராப்பிட்டி போன்ற நன்னீர் உள்ள இடங்களுக்கு 3 4 மைல்கள் கால் நடையாகச் சென்று குடங்களில் தண்ணீர் கொண்டு வருகின்றனர்.

## சனசமூக நிலையங்களின் சேவை

(சாவகச்சேரி)

''யாழ் மாவட்டத்திலுள்ள சன சமூக நிலையங்கள் ஆரம்ப காலங்களில் சிறந்த முறையில் இயங்கி மக்களிடையே ஒற்றுமையையும் ஐக்கியத்தையும் ஏற்படுத்தி வந்தன. ஆனல் நாட்டுச் சூழ்நிலையால் கடந்த சில வருடங்கள் சனசமூக நிலையங்கள் இயங்க வில்லை. இவற்றைப் புனரமைத்து செயல்பட வைக்க வேண்டிய அவசிய தேவை இன்று ஏற்பட்டுள்ளது ''

இவ்வாறு கைதடி பொது சன நூலகத்தில் யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபை கைதடி உப அலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு. செ தங்கராசா தலைமையில் நடந்த கைதடி சனசமூகநிலையங்களின் சமாச அங்குரார்ப்பணக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய சாவகச்சேரித் தொகுதி சன சமூக நிலைய உத்தியோகத்தர் திரு எஸ் தவநாயகம் கூறினர்.

இறுதியில் கைதடி சன சமூக நிலையங்களின் சமாசத்தின் புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டது.

# வெளிநாட்டுவேலைவாய்ப்பு: விமானக்கட்டணச் சலுகை

(கொழும்பு)

வெளிநாட்டுககு வேலைவாய்ப்புப் பெற்றுச்செல்லும் இலங்கையர்களுக்கு விமானப் பயணச்சீட்டில் 15 வீதம்கழிவு வழங்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது. இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் வேலைவாய்ப்பு சான்றிதழ் வைத்திருப்பவர்களுக்கே இந்தச்சலுகை வழங்கப்படும்.

அண்மையில் விமானப் பயணக்கட்டணங்கள் உயர்ந்தப்பட்டதனல் வேலைவாய்ப்புப் பெற்றுச் செல்லவிருந்தவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருந்தனர். அதனல் வேலைவாய்ப்பு பெற்றுச்செல்பவர்களின் எண்ணிக்கையும் குறைந்தது இதனையடுத்தே அமைச்சர் திரு. பி. வி. இம்புலான விமானப்பயண நிறுவனங்களுடனும்அரசாங்கத்துடனும் ஆலோசனை நடாத்தி இம் முடிவு எடுக்கப்பட்டது.

(ய-செ)

## கிளிநொச்சி மக்களவை கண்டனம்

[கிளிநொச்சி]

கிளிநொச்சி மாவட்டத்தில் மாணவர்கள் கைதாவதையிட்டும் பாடசாலைகளில் தேடுதல் நடைபெறுவதற்கும் கிளிநொச்சி மாவட்ட மக்களவை கண்டனம் தெரிவித்துள்ளது

இரவு பகலாக இடம் பெறும் இத்தேடுதலால் மக்களின் நாளாந்த வாழ்க்கை சீர்குலைந்துள்ளதாகவும் விவசாய முயற்சிகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ள மக்கள் அவையினர் இவை அனைத்தும் நிறுத்தப்பட வேண்டும்எனவும் வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளனர்.

அத்துடன் பூநகரி மகா வித்தியாலய அலுவலக எரிப்புச் சம்பவத்தையும் கிளிநொச்சி மாவட்ட மக்கள் அவையினர் கண்டித்துள்ளனர்.

## கைதான ஐவரும் விடுதலை

(வவனியா)

கடந்த புதன்கிழமை அநுராதபுரத்தில் பெற்ரோலியக் கூட்டுத்தாபன சம்பவததைத் தொடர்ந்து பொலிஸாரினல் கைது செய்யப்பட்ட வவனியா வாசிகள் ஐவரும் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

அருளானந்தன், சுனில், குணசேகர, நெல்சன், விக்கினேஸ்வரன் ஆகியோரே இவ்வாறு கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப் பட்ட பின் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இதனிடையே கொலன்னவை எரிபொருள் விநியோக நிலைய ஊழியர்கள்' வடபகுதியிலிருந்து வரும் பவுஸர்களுக்கு எரிபொருள் வழங்க மறுத்து வருகின்றனராம் அச்சம் காரணமாகவும், மேலிடத்து உத்தரவு காரணமாகவுமே அவர்கள் மறுத்து வருவதாகத் தெரியவருகிறது.

(இ-செ)

## பட்டப் படிப்புக்கு பத்திரிகைத் துறையையும் தேர்ந்தெடுக்கவேண்டும்

(யாழ்ப்பாணம்)

''இன்று ஈழத்தில் முறையாகப் பத்திரிகைத் துறை படித்தவர்கள் தமிழ் பத்திரிகைகளில் பொறுப்பான பதவிகளிலோ சாதாரண நிலைகளிலோ இல்லை. எனவே தமிழ்ப்பத்திரிகைகளின் வளர்ச்சிக்கும், சிறப்புக்கும் வளர்ந்தோங்கி வருகின்ற உலகளாவிய பத்திரிகைகளின் தன்மைக்கும் ஏற்ப தமிழ் ஈழப் பத்திரிகைகள் தோன்றி வளர இளஞ்சந்ததிகள் பத்திரிகைத் துறையை ஒரு பட்டப்படிப்பு நெறியாகக் கொண்டு கல்வி கற்பது அவசியம்''

'காந்தம்' பத்திரிகையின் வெளியீட்டு விழாவில் வெளியீட்டுரை வழங்கிய யாழ். இலக்கிய வட்டத்தலைவர் திரு. செம்பியன செல்வன் இவ்வாறு கூறினர்.

யாழ். அத்தியடியிலுள்ள 'காந்தம்' காரியாலயத்தில் இலக்கியப் பேரவைச் செயலாளர் திரு. எஸ். சபாரத்தினம் (சசிபாரதி) தலைமையில் நடந்தஇவ்விழாவில்யாழ்,வர்த்தக சங்கச் செயலாளர் திரு. எஸ். நமசிவாயம் முதல் பிரதியைப் பெற்றுக்கொண்டார்.

புலவர் பார்வதிநாதசிவத்தின் தமிழ் வாழ்த்துடன் ஆரம்பமான இவ்விழாவில் திரு. செம்பியன் செல்வன் மேலும் கூறியதாவது:

''இளைஞர்களே இன்றைய நாட்டை, அதன் நடப்புக்களை நிர்ணயிப்பவர்களாக இருக்கின்றனர். எனவே அவர்களின் சிந்தனையை, மனப்போக்கை மற்றவர்கள் நன்கறிந்திருப்பது அவசியம். அதற்கு இத்தகைய பத்திரிகைகளின் முயற்சிகள் அவசியம்.

'' 'காந்தம்' இளைஞர்களின் கூட்டு முயற்சி, ஒற்றுமையின் சின்னம், ஆற்றல்களின் இணைப்பு, மானுடன் பிணைந்த கைவிலங்குகளை மாணவர்கள் கரங்கள் சேர்ந்தே நொறுக்கும் என்பதற்கு சிறந்த எடுத்துக்காட்டாகக் கருதப்படக் கூடிய முயற்சி. '

எழுத்தாளர் நெல்லை க பேரன, திரு. எஸ் பெருமாள், மாணவர்கள் பிரதிநிதிகளான செல்வன்கள் ரி கிருபைராஜன், எஸ். நந்தகுமாரன், செல்விகள் ஆர்.இந்திரகலா, வி ஏ எஸ். சுரபி ஆகியோரும் பேசினர்கள். 'காந்தம்' குறுக்செழுத்துப் போட்டியில் முதல்பரிசு பெற்ற செல்வி ஆர். ஜெயநிதிக்கு பரிசு வழங்கப்பட்டது. 'காந்தம்' ஆசிரியர் கா. யோ. கிரிதரன் நன்றிகூறினர். (ஐ)

## விபத்தில் இளைஞர் பலி

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞர் ஒருவர் விபத்துச்குள்ளாகி ஸ்தலத்திலேயே பலியானர்.

நேற்றுமுதினம்காலை இப் பரிதாபவிடத்துச் சம்பவம் இடம் பெற்றது.

இளவாலையைச் சேர்ந்த ஆ. விஜயகுமார் (22 வயது) என்பவரே விபத்தில் சிக்கி பலியானவராவார்.

காங்கேசன்துறை லங்கா சிமெந்து லிமிட்டெட் ஸ்தாபன தில் பாதுகாப்பு ஊழியராகக் கடமையாற்றி வந்த இவர் நேற்றுமுன்தினம் காலை காங்கேசன்துறையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்தபோது தெல்லிப்பழைக்கு அண்மையில் மினிபஸ் ஒன்றுடன் விபத்துக்குள்ளாகி ஸ்தலத்தில் மரணமானர். (மா)

## இன்றைய பலன்

மாதம்: சித்திரை
திகதி: 16 (1986-4-29)
கிழமை: செவ்வாய்
திதி: பஞ்சமி காலை 7-05ன் மேல் ஷஷ்டி
நக்ஷத்திரம்: பூராடம் பி. இ.வரை

மேடம்: இதயப்படுதாவில் இன்பத்தின் மின்னல். பிதாவழி ஆதரவு தாராளமாகக் கிடைக்கும். தெய்வ நம்பிக்கையும் மேலிடும்.

இடபம்: இதமான வாழ்வுடன் நல்வாழ்த்தும் பெரியோர்களின் ஆதரவும் தாராளமாகக் கிடைக்கும். செய்தொழிலாலும் சிறப்புண்டு.

மிதுனம்: இலட்சியப் பாதையை நோக்கி இன்று பயணம் ஆரம்பமாகும். எதிர்பார்த்த பொருள்வரவும் இன்று கிடைக்கும். தரமான நாள்.

கடகம்: துன்பத்தின் ரேகைகள் படரும். எதிலும் தயக்கம் ஏற்படும். ஆதரவுகொடுத்தவரே முடிவில் கையை விரிக்கக்கூடும்.

சிங்கம்: மனப் போராட்டம் அதிகரிக்கும். உறவினர் ஒருவர்மீது ஆத்திரம் பிறக்கலாம் பிள்ளையொன்றின் உடல்நலம் பாதிக்கப்படலாம்.

கன்னி: குடும்பத்தில் குதூகலம் இடம்பெறும். வெளியிடத்திலிருந்து மகிழ்ச்சிகரமான செய்தியொன்று கிடைக்கலாம். பணவரவுக்கும் இடமுண்டு.

துலாம்: அன்னியரின் சகவாசம் சங்கடத்தில் மாட்டிவைக்கும். அவசர முடிவின் மூலம் சில துன்பங்கள் விளையலாம் தொழிலிலும் தடைகள் உண்டு

விருச்சிகம்: வாழ்க்கையில் சில முன்னேற்றமான சம்பவங்கள் இடம்பெறும் வாகன விருத்திசகு இடமுண்டு. வணிகர்களுக்கு சிறப்பான தினம்.

தனுசு; மகிழ்ச்சிகரமான தினம. குடும்பத்தில் விருந்தினர்கள் வருகையால் கலகலப்பு ஏற்படும் நீண்டநாள் நண்பர் ஒருவரை மீண்டும் சந்திப்பீர்கள்.

மகரம்: பணம் பலவழிகளிலும் சலவாகும். அந்நிய நபர் ஒருவரால் ஏமாற்றமடையககூடும் உமது நடவடிக்கைகளை எதிரிகள் நோவு பார்ப்பர்.

கும்பம்: சாஸ்திரவழியால் மகிழ்ச்சிக்கு இடமுண்டு பிரிந்தவர்கள் மீண்டும் வாழ்க்கையில் இணைவர் புத்திரவழியாலும் மகிழ்ச்சியுண்டு

மீனம்: தொல்லைகள் தலைதூக்கும், தொழில்புரியும்இடத்தில் ஏமாற்றத்திற்கு இடமுண்டு. அவசர முடிவைத் தவிர்க்கவும்.

**திருமலை வே. ரவீந்திரன்**

## மறக்கமுடியாத சேவையாளன்

அண்மைக்காலத்தில் ஹாட்லிக்கல்லூரியின் சீருக்கும் சிறப்பிற்கும் பெருமைக்கும் புகழிற்கும் பெருமளவு காரணமாயிருந்த திரு எம். இராமகிருஷ்ணன் ஆசிரியர் அவர்கள் மாலைதீவுக்குடியரசில் சென்ற மாதம் 27ந் திகதி விளையாட்டில் ஈடுபட்டுக்கொண்டிருந்த சமயம், மாரடைப்பின் காரணமாக சடுதியாக இறைவனடி சேர்ந்தமை நம் அனைவரையும் அதிர்ச்சியுறச் செய்தது.

1985 ஆனி மாதம் அன்னார் ஒய்வுபெறத்தீர்மானித்து விட்டதாக என்னிடம்கூறியபோது யான் அடைந்த சோகஉணர்வு போல, எவரின் பிரிவின் போதும் யான் அடைந்ததில்லை. ஏனெனில் சிறந்த ஒரு ஆசிரியருக்கிருக்கவேண்டிய நற்பண்புகள் அனைத்தும் அவரில் காணப்பட்டன. பலவருடங்களாக ஒருநாள்கூட லீவு எடுக்காது பணியாற்றிய பெருமை அவருக்குரியது.

மகாரகம ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் விசேட கணிதப் பயிற்சி பெற்றவரும் லண்டன் பல்கலைக்கழக பட்டதாரி பரீட்சைக்குக் கணிதத்தில் தோற்றியவருமாகிய அன்னார் கீழ் வகுப்புகளிலும் சரி மேல்வகுப்புகளிலும் சரி மாணவர்கள் எளிதில் கிரகித்துப்பின் சிந்தித்துத்தாமே செய்யக்கூடிய வகையில் அப்பாடத்தினைத் திறம்படக் கற்பித்தார். பாடசாலையின் பரீட்சைப் பெறுபேறுகள் இதை ரூபிக்கும்.

மாணவர்களுடைய கல்வி வளர்ச்சி, உளவளர்ச்சி, உடல் வளர்ச்சி. ஒழுக்கம், கீழ்ப்படிவு, சீரியபழக்கவழக்கங்கள் அவர்களின் எதிர்காலம் முதலியவற்றில் கண்ணும் கருத்துமாய் இருந்தார். எள்ளளவேனும் கண்ணியம் தவறுர் என்கின்ற நன்நம்பிக்கையைப் பெற்றவர். கல்லூரியின் விளையாட்டுத்துறைக்கு ஆணிவேராகத் திகழ்ந்தார். வருடாவருடம் கல்லூரியினதும் வட்டாரத்தினதும் மெய்வல்லுநர் போட்டிகளை செவ்வனே நடாத்திவைத்தார். கல்வி இலாகாவுக்கும் பற்பல போட்டிகளை ஒழுங்கு செய்துவட்டாரக்கல்வி அதிகாரிகளுக்கு உறுதுணையாக திகழ்ந்தார். கால்பந்து பயிற்சியாளராய் பணியாற்றி பற்பல வெற்றிகளைக் கல்லூரி ஈட்டக் காரணமாய் இருந்தார். அங்கீகரிக்கப்பட்ட மத்தியஸ்தராகவும், விளையாட்டுகளின் மிகச் சிக்கலான நுணுக்கங்களை அறிந்த நிபுணராயும். கடமையாற்றினர். சங்கீதம், நாடகம் சமய நிகழ்ச்சிகளிலும் மாணவர்களைத் திறம்பட நெறிப்படுத்தியதுடன் அவ்வைபவங்களை தானே முன்னின்று நடத்துவார், தேசிய சேவை, சிரமதானம், ''எமது கல்லூரி வாரம்'' என்பன வற்றைத்திறம்பட ஒழுங்குசெய்தார். நேரசூசிகை தயாரிப்பதற்குப் பொறுப்பாய் இருந்தார். பெற்றோர்-ஆசிரியர் சங்கம் கல்லூரி அபிவிருத்திச் சங்கம் என்பனவற்றின் செயலாளரும், பொருளாளருமாக பல வருடகாலம் ஹாட்லிக்கல்லூரிக்கு மட்டுமன்றி வட-இந்து மகளிர் கல்லூரிக்கும் சேவை செய்து தன் அயராத உழைப்பினால் சிலமாடிக்கட்டிடங்களையும் தோற்றுவித்தார்.

பலரின் உயர்ச்சிக்கு அடிக்கல்லாயிருந்த அவர், தன் திறமை, கடின உழைப்புக்கேற்ற பதவி உயர்வு ஒன்றையேனும் அரசாங்கத்திடமிருந்து பெறுமை கடைசிவரை அவருடைய மனத்தை வருத்திக்கொண்டேயிருந்தது. தனது வாழ்வின் மிகப்பயனுள்ள 18 வருடங்களை ஹாட்லிகல்லூரிக்க அர்ப்பணித்திருந்தார். 55 வயது வந்ததும் தனது கடைசி 3பிள்ளைகளின் கல்வியை இந்தியாவில் தொடரவைக்கும் நோக்கத்துடன் மாலைக்குடியரசுக்கு ஆசிரிய சேவையைத் தொடர்ந்து செய்யப்போன அவர் இரண்டு தணைகளுள் திடீர் மரணமடைந்தது ஓர் சகிக்கமுடியாத சம்பவமே. அவர் வடமராட்சி மாணவர்களுக்கு செய்த அளப்பரிய சேவையை நம் என்றுமே மறக்கமுடியாது.

**டபிள்யூ. என். எஸ். சாமுவேல்**
அதிபர் ஹாட்லிக் கல்லூரி.

### விளையாட்டு அமைச்சின் ஆதரவில்

# அடுத்த மாதம் யாழ். நகரில் பெரும் விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட உதவி அரசாங்க அதிப பிரிவுகளிடையிலான வருடாந்த ''விளையாட்டு விழா'' அடுத்த மாதம் 3ம் திகதி ஆரம்பமாகின்றது. விளையாட்டு அமைச்சின் அனுசரணையுடன் நடைபெறும் இவ்விளையாட்டு விழா, யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியின் புதிய விளையாட்டு அரங்கில் அடுத்த மாதம் 25ம் திகதி வரை நடைபெறவுள்ளது. இவ் விளையாட்டு விழாவில் உதைபந்தாட்டம், வலைப்பந்தாட்டம், கரப்பந்தாட்டம், எல்லே ஆகிய போட்டிகள் நடைபெறவுள்ளது

### வலை பந்தாட்டம்

பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டி அடுத்த மாதம் 3ம் திகதி ஆரம்பமாகி 4ம் திகதி சாம்பியன் மோதல் நடைபெறும். இப் போட்டியில் நல்லூர் ஊர்காவத்துறை, வேலணை, சுன்னாகம், சண்டிலிப்பாய் யாழ்ப்பாணம், நெடுந்தீவு, உடுவில், கோப்பாய் ஆகிய உதவி அரசாங்க பிரிவுகளின் சாம்பியன் கோஷ்டிகள் கலந்துகொள்கின்றன.

இப்போட்டி சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

### கரபந்தாட்டம்

ஆண்களுக்கான கரபந்தாட்டப் போட்டி அடுத்தமாதம் 9ம் திகதி ஆரம்பமாகி 10ம் திகதி சாம்பியன் மோதல் நடைபெறும். இப்போட்டியில் உடுவில், வேலணை, நல்லூர், ஊர்காவற்துறை, சண்டிலிப்பாய், சுன்னாகம், நெடுந்தீவு, யாழ்ப்பாணம், கோப்பாய் ஆகிய உதவி அரசாங்க பிரிவுகளின் சாம்பியன் கோஷ்டிகள்கலந்துகொள்கின்றன.

பெண்களுக்கான கரபந்தாட்டப் போட்டி அடுத்தமாதம் 11ம் திகதி காலை 8 30 மணிக்கு ஆரம்பமாகி மாலை மணிக்கு இறுதிப் போட்டியுடன் முடிவடையும்.

இப்போட்டியில் ஊர்காவற்துறை, வேலணை, யாழ்ப்பாணம், கோப்பாய், சுன்னாகம், சண்டிலிப்பாய், நல்லூர், நெடுந்தீவு, உடுவில் ஆகிய உ. அரசாங்க பிரிவுகளின் சாம்பியன் கோஷ்டிகள் கலந்து கொள்கின்றன

மேற்படி கரபந்தாட்டப் போட்டிகள் மட்டும் பானஷுயூர் சென். அன்ரனிஸ் கழக மைதானத்தில் நடைபெறும்.

### எல்லே போட்டி

எல்லே போட்டி அடுத்த மாதம் 16ம் திகதி தொடக்கம் 18ம் திகதிவரை நடைபெறும். 22 வயதுக்குட்பட்ட வீராகளிடையே நடைபெறும் இப் போட்டியிலும் மேற்படிப் போட்டிகளில் கலந்து கொள்ளும் 9 உதவி அரசாங்க பிரிவுகளின் சாம்பியன் கோஷ்டிகளே கலந்து கொள்கின்றன.

இப்போட்டி சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

### உதைபந்தாட்டம்

22 வயதுக்குட்பட வீரர்களிடையே நடைபெறவிருக்கும் உதைபந்தாட்டப் போட்டி அடுத்த மாதம் 22ம் திகதி ஆரம்பமாகி 26ம் திகதிவரை நடைபெறும்.

நல்லூர்: கோப்பாய், நெடுந்தீவு, சுன்னாகம், ஊர்காவற்துறை, யாழ்ப்பாணம், சண்டிலிப்பாய், வேலணை, உடுவில் ஆகிய உதவி அரசாங்க பிரிவுகளின் தெரிவு செய்யப்பட்ட பலம்கொண்ட சாம்பியன் கோஷ்டிகளே இவ்வுதைபந்தாட்டப் போட்டியில் கலந்து கொள்கின்றன.

இப்போட்டிகள் அனைத்தும் ''நொக்கவுட்'' முறையிலேயே நடாத்தப்படவிருக்கின்றன.

வலைப்பந்தாட்டப் போட்டி யாழ் மாவட்ட வலைப்பந்தாட்டப் பயிற்சியாளர் செல்வி கே வைத்திலிங்கம் தலைமையிலும், கரபந்தாட்டப் போட்டி, ஊர்காவற்றுறை விளையாட்டுப்பகுதி உத்தியோகத்தர் திரு. பி. பொன்னுச்சாமி தலைமையிலும் எல்லே போட்டி யாழ். மாவட்ட விளையாட்டுப் பிரிவு அதிகாரி திரு. எஸ் மரியதாஸ் தலைமையிலும்; உதைபந்தாட்டப் போட்டி, யாழ் மாவட்ட உதைபந்தாட்டப் பயிற்சியாளர் திரு ஏ எஸ். குணரட்ணம் தலைமையிலும் நடைபெறவுள்ளன.

இவ்விளையாட்டு விழாவுக்கான சகல ஏற்பாடுகளையும் யாழ் மாவட்ட பிரதம விளையாட்டு உத்தியோகத்தர் திரு. எஸ். மரியதாஸ் சிறப்பாகச் செய்துள்ளார் குறிப்பிடத்தக்கது. (வி)

## பண்பாளர் "கலங்காமு"



எளிமையான வாழ்க்கையும், இறுக்கமான கொள்கைப் பிடிப்பும், பிறர் நலப் பேணும் தீவிர நாட்டமும் கொண்டவரான 'கலங்காமு' என்னும் அன்பராக மண்டைதீவு தந்த நற்பண்பாளர் இராமு கந்தையா அமரத்துவமடைந்து இன்று ஒருமாதமாகிவிட்டது இவரின் அமரத்துவம்; நம்பமுடியாத ஒரு திடீர் செய்தி, மண்டைதீவு மக்களுக்கு மட்டுமல்ல யாழ் மாவட்டத்திற்கே ஏற்பட்டுள்ள பேரிழப்பாகும்.

நலிந்தவர்கள், நொந்தவர்கள், உதவி வேண்டியவர்களுக்கும், சமூகப் பொதுவேலைகள் யாவுக்கும் கிராமிய மட்டத்தில் மட்டும் நிற்காது பிரதேச ரீதியாக முழுமையான பங்களிப்புச் செய்தவர் அவர். அரசியலில் நன்கு ஆர்வமும், ஈடுபாடும் உள்ளவர். தான் பிறந்த இனமும், மண்ணும் சுயமரியாதையோடும், விடுதலையோடும் வாழவேண்டுமென்ற அரசியல் சித்தாந்தத்தோடு மட்டும் நிற்காது செயற்பாடு கொண்டவராகத் தன் இறுதி மூச்சுவரை வாழ்வாங்கு வாழ்ந்தவர்.

1949-இல் இலங்கைத் தமிழரசுக் கட்சியிலும், அதன்பின் தமிழர் விடுதலைக் கூட்டணியின் மலர்வோடும் தன் சுய இலாபத்திற்கு அரசியலைப் பயன்படுத்தாதும், கொண்ட கொள்கை பிறழாத பங்காளியாகவும் வாழ்ந்தவர் இராமு கந்தையா, தனக்கே உரித்தான ஆளுமையின் சிறப்பினாலும் தன்னை வந்தடைந்த பதவிகளாலும் பிறர்நலம் பேணும் தனிமனிதனாக, மனிதநேயம் மிக்கவராக வாழ்ந்துகாட்டிய பண்பாளர்.

இன்னும் வாழ்ந்து இன்முகத்தோடு சேவையாற்ற வேண்டிய அன்பர் 'கலங்காமு' சிவப்பேறினை அடைந்தமை யாராலும் அழிக்கமுடியாத நியதியின் திட்டமாகும்.

இருந்தும் இந்தப் பண்பாளரின் பிரிவு எளிதில் ஈடுசெய்ய முடியாத துயர்தருவதே. புகழ் உடம்பு அடைந்த அன்னாரின ஆன்மா சாந்தியுறுவதாக.

—நவஜீவன்.

# கண்நோயாளரின் கவனத்துக்கு...

(யாழ்ப்பாணம்)

தற்பொழுது வடபகுதியில் வேகமாகப் பரவிவரும் கண்ணோய்க்கு உடனடியாக சிகிச்சை எதுவும் அளிக்கப்படுவதில்லை. நுண் கிருமிகள் மூலம் பரவும் இக்கண்ணோய் கூடியது நான்கு நாட்களுக்கு மாத்திரமே நீடிக்கும் என ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

கண்ணோய் ஏற்பட்டவர்கள் உடனடியாக ஆஸ்பத்திரிக்குச் செல்ல வேண்டியதில்லை; மூன்று அல்லது நான்கு நாட்களுக்குள் மாறுத விடத்தும் கண்களில் பார்வை மங்குவது போனற நிலைமைகளிலும் மாத்திரமே மருத்துவரின் சிகிச்சையை நாடவேண்டும் நோயாளியின் கண்ணீர், தும்மல், இருமல் போன்றவற்றின் மூலம் கிருமிகள் வெளியேறி பிறருக்கும் பரவுமாதலால கண்ணோய் ஏற்பட்டவர்கள் கூடிய வரையில் தனித்து இருத்தல் வேண்டும் பிறருடன் நெருங்கிப் பழகாமலும், தாம்பாவிக்கும் பொருள்களைப் பிறர்பாவிக்காமலும் பார்த்துக்கொள்வதுஅவசியம்.

அடிக்கடி தம் கண்களை சவர்க்காரம் பாவித்துக் கழுவுவதும் தினசரி குளிப்பதும் அவசியம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

# விளையாட்டுச் செய்திகள்

(பண்டத்தரிப்பு)

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவு விளையாட்டுக் கழகங்களுக்கிடையே நடைபெற்ற வருடாந்த மெய்வல்லுநர் போட்டியில் ஆண்கள் பிரிவிலும், பெண்கள் பிரிவிலும் பண்டத்தரிப்பு ஐக்கிய விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றுச் சாம்பியன் வெற்றிக் கேடயத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தல் நடைபெற்ற இப்போட்டிக்கு பிரதம அதிதியாக சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு. க. சண்முகநாதன் கலந்து கொண்டார். யாழ். மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் திரு எஸ் மரியதாஸ் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். சண்டிலிப்பாய் விளையாட்டு பிரிவு உத்தியோகத்தர் திரு எஸ் கிருபாகரன் நன்றியுரை நிகழ்த்தினர்.

இப்போட்டியை முன்னிட்டு நடாத்தப்பட்ட மகளி வலைப்பந்தாட்டப் போட்டியில் பண்டத்தரிப்பு பிறைட்டன் விளையாட்டுக் கழகம் முதலிடத்தைப் பெற்று வெற்றியீட்டியது. உதைபந்தாட்டப் போட்டியில் விளான் ஞானோதய விளையாட்டுக் கழகமும், கைப்பந்தாட்டப் போட்டியில் மாதகல் சென். தோமஸ் கழகம் முதலாமிடத்தையும், எல்லே போட்டியில் விளான் ஞானோதய விளையாட்டுக் கழகம் முதலாமிடத்தையும் பெற்று வெற்றியீட்டின.

போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான கேடயங்களையும், பரிசில்களையும் சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் க. சண்முகநாதன் வழங்கினார்.

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள இயக்கச்சி கனிஷ்ட வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் அண்மையில் மிகவும் சிறப்பாக நடைபெற்றன.

கிளிநொச்சி-முல்லைத்வு கல்விப் பணிப்பாளர் ஜனுப் எம் எம். மன்சூர் பிரதம விருநதினராகக் கலந்து கொண்டார் சிறப்பு விருந்தினர்களாக பளை கொத்தணிப் பாடசாலை அதிபர் திரு அ பொ. செல்லையா, பரந்தன் வட்டாரக் கல்வி அதிகாரி திரு நா தணிகாசலப்பிள்ளை ஆகியோர் கலந்துகொண்டனர் (ஐ)

(பச்சிலைப்பள்ளி)

பளை கொத்தணிப் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற மெய்வல்லுநர் போட்டியில் பளை மகாவித்தியாலயம் முதலாமிடத்தையும், இயக்கச்சி கனிஷ்ட வித்தியாலயம், இரண்டாமிடத்தையும், கிளாலி றோமன் கத்தோலிக் பாடசாலை மூன்றாமிடத்தையும் பெற்றன.

## அஞ்சலி சுவரொட்டி

[யாழ்ப்பாணம்]

வவனியாவில் கடந்த மார்ச் மாதம் இடம்பெற்ற நேரடி மோதலின்போது அரசபடையினர் 13 பேர் பலியானதாகவும், அதன்போது தமது தரப்பில் பலியான வவனியாவைச் சேர்ந்த இளங்கோ (லெப்டினன்ட் குமார்)வுக்கு ஒரு மாதகாலம் பூர்த்தியடைந்தமைக்கான வீர அஞ்சலியைச் செலுத்துவதாகவும் தெரிவித்து தமிழ்ஈழ விடுதலை இராணுவம் யாழ். குடா 5 டெங்கம் சுவரொட்டிகளை ஒட்டியுள்ளது.

## புதிய நிர்வாகிகள்

(உடுவில்)

நவாலி அட்டகிரி சைவ வித்தியாசாலையின் பாடசாலை அபிவிருத்திச் சங்க வருடாந்தக்கூட்டம் அதிபர் திரு. இ. வல்லிபுரம் தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு இ. வல்லிபுரம் செயலாளர் திரு. என். பரமகுரு பொருளாளர்திரு திருமதி ரி அரியம்: 8 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது.

## இன்று கருத்தரங்கு...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

கல்வி அதிகாரி திரு. எஸ். தனஞ்செயன் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் யாழ். கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தாலிங்கம் சிறப்புரை நிகழ்த்துவார்.

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

செவ்வாய்க்கிழமை 29-4-86

# “கோவில்கள் மூடப்பட்டு பாதிப்புற் அனைவருக்கும் நஷ்டஈடு வழங்குக’

## யாழ். அரச அதிபரிடம் இந்துக்கோவில்கள் பாதுகாப்புக்குழு வேண்டுகோள்

[யாழ்ப்பாணம்]

''இராணுவ முகாம்களுக்குச் சமீபத்திலுள்ள கோவில்களில் பூசைகள் செய்ய முடியாமல் இருக்கிறது யாழ்ப்பாணம் கோட்டை முனீஸ்வரன் கோவில், பருத்தித்துறையில் இரு கோவில்கள், செல்வச் சந்நிதி உட்படப் பல கோவில்களில் பூசைகள் நிறுத்தப்பட்டுள்ளன. பூசகர்களோ வழிபடுபவர்களோ கோவிலுக்குச் செல்ல முடியாமலிருக்கிறது''.

யாழ். அரசாங்க அதிபர் திரு எம். பஞ்சலிங்கத்தை யாழ். கச்சேரியிலுள்ள அவரது காரியாலயத்தில், இலங்கையில் உள்ள இந்துக் கோவில்களினதும், தாபனங்களினதும் பாதுகாப்புக்கான அமைப்புக் குழுவினர் நேற்றுச் சந்தித்தபோது இவ்வாறு தெரிவித்தனர்.

இக்குழுவில் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரியசுவாமிகள், சிவஸ்ரீ கு. நகுலேஸ்வரக் குருக்கள், வைத்தியநாதக் குருக்கள், பாலேந்திரக் குருக்கள், கலாநிதி பாலசுந்தரம், செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, திரு. பரமரட்சகபாலன், திரு. க கனகராசா, திரு. ரி தேவராசா ஆகியோர் வந்திருந்தனர். பொதுசனத் தொடர்பு அதிகாரி திரு. த. குலசேகரமும் சமுகமளித்திருந்தார்

பல நூறு வருடங்களாகக் கீரிமலையில் செய்துவந்த அந்திமக்கிரியைகளைச் செய்யமுடியாமல் மக்கள் கஷ்டப்படுவதாகவும், ஆயுதப்படையினர்முகாம்களுக்குச் சமீபத்திலுள்ள கோவில்களில் தாக்குதல் நடைபெறுவதாகவும் கொள்ளையடிக்கப்படுவதாகவும், எ க்கப்படுவதா வும் இதனால் பூசகர்கள் நாளாந்த பூசைகளைச் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் குழுவினர் தெரிவித்தனர்.

வடபகுதியில் பல கோவில்களில், வருடாந்த மகோற்சவம் நடத்தப்படுவதில்லை என்றும் தெரிவித்த குழுவினர் வடபகுதியில் பல கோவில்கள் மூடப்பட்டுள்ளதால் பூசகர்கள், கோவில் சேவையாளர், கலைஞர்கள், கோவில் வீதிகளில் சிறு கடைகள் வைத்திருப்போர் அக் கடை ஊழியர்கள், யாத்திரிகர்கள் யாத்திரிகர் மட ஊழியர்கள் பெருமளவு பாதிக்கப்பட்டுளார்கள் என்றும் இவர்களுக்கு நிவாரணம், அல்லது நஷ்டஈடு வழங்கப்படுவது அவசியம் என்றும்வலியுறுத்தினார்கள். (க)

## இரு கொள்ளைகள்

[யாழ்ப்பாணம்]

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு தாவடி ஆசாரி ஒழுங்கையில் ஸ்தபதி ஒருவரின் வீட்டினுள் புகுந்த ஆயுதம் தாங்கிய நபர்கள் நகைகள், பணம், றேடியோ, டெக் உட்பட சுமார் 75 வீடியோ படப் பிரதிகளையும் எடுத்துச் சென்றுள்ளனர்.

நாகலிங்கம் சோமசுந்தர ஸ்தபதி என்பவரின் வட்டிலேயே இந்தக்கொள்ளை நடந்துள்ளது.

நள்ளிரவு வீட்டுக்கூரையின் மேல்ஏறி வீட்டினுள் புகுந்த இந்நபர்கள் ஆயுதமுனையில் ஸ்தபதியைப் பயமுறுத்தி கொள்ளையை நடத்தினர்.

### யாழ். நகரில்

யாழ். 3-ம் குறுக்குத்தெருவில் வசிக்கும் எம். கனகலிங்கம் என்பவருடைய வீட்டிலும் கொள்ளையடிக்கப்பட்டதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது. ஆயுதம்தாங்கிய நபர்கள் வீட்டிலிருந்த ரி வி. றேடியோ, மணிக்கூடு, நகை, ஆகியவற்றுடன் சுமார் மூவாயிரம் ரூபா பணத்தையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை இரவு 7-30 மணியளவில் இச் சம்பவம் நடைபெற்றுள்ளது. டெலிகா வானென்றில் வந்தவர்களே இக்கொள்ளையை நடத்தினராம். [ஐ]

## கந்தளாய்க்கு பிரிட்டிஷ் இரு நிபுணர்கள் விஜயம்

[திருகோணமலை]

கந்தளாய் அணை உடைப்புக்கான காரணங்களை ஆராயும் பொருட்டு இரு பிரிட்டிஷ் நிபுணர்கள் நேற்று ஸ்தலத்துக்கு விஜயம் செய்தனர்.

டாக்டர் போல்பெக், திரு. டெறெக்நைட் ஆகிய இருவரே இந் நிபுணர்கள் இவர்களுடன் இலங்கை அரச அதிகாரிகளும் சென்றுள்ளனர்.

அணை உடைப்பெடுத்த இடத்துக்குச்சென்று பார்வையிட்ட இவர்கள் இவ் விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் சாட்சியங்களைப் பதிவுசெய்துகொண்டனர். இவர்க இன்று கொழும்பு திரும்புவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தஇரு பிரிட்டிஷ் நிபுணர்களினதும் செலவுகளை பிரிட்டிஷ் அரசு பொறுப்பேற்றுள்ளது

## பசி ஓரிடம்; உணவு ஓரிடம்

[திருகோணமலை]

கந்தளாய்க் குளம் உடைப்பெடுத்ததால் பாதிக்கப்பட்டு அகதிகளாகியிருக்கும் தமிழர்கள், முஸ்லிம்கள் ஆகியோருக்கு உ வுப் பொருட் ள் வழங்கப்படுவதில்லை என்று புகார் செய்யப்பட்டுள்ளது

இந்த அகதிகளுக்குக் கொண்டுசெல்லப்படும் உணவுப் பொருள்கள் இடைநடுவில் வைத்துச் சீருடையினரால் அபகரிக்கப்பட்டு பாதிக்கப்பட்ட மற்றொரு சமூகத்துக்கு வழங்கப்படுகிறதாம் இதனால் தமிழ், முஸ்லிம் அகதிகள் மிகவு கஷ்டப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் முகாமில்வைத்து தமிழ், முஸ்லிம் அகதிகளுக்கு வழங்கப்பட்ட உணவுப் பொருள்கள்கூட இரவு நேரங்களில் திருடப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

[மா]

## கண்காணிப்புக் குழு ‘பூஸா’ விஜயம்

[கொழும்பு]

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு மூன்றும் தடவையாக ‘பூஸா’ முகாமுக்குக் கடந்த சனிக்கிழமை விஜயம் செய்தது.

இக்குழு சிறைச்சாலை நிலைமை குறித்தும் அங்கு தோன்றியுள்ள பிரச்னைகள் குறித்தும் சிறைச்சாலை அதிகாரிகளுடன் பேசியது. கடந்த மூன்று மாத காலமாக அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை மிகவும் அதிகமாக இருப்பதனால் தோன்றியுள்ள பிரச்னைகள் குறித்தும் ஆராயப்பட்டதாம்.

‘பூஸா’வில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் பிரதிநிதிகள் குழுவொன்றும் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவைச் சந்தித்துத் தமது பிரச்னைகளையும் குறைகளையும் எடுத்துக் கூறியுள்ளது

[ய - செ]

## கடற்படை---

[1ம் பக்கத் தொடர்ச்சி]

செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இனிமேல் தீவுப் பகுதிக்கு வாகனங்கள் எதுவும் செல்ல வேண்டியிருந்தால் பண்ணைத் தாம்போதியூடாகவே செல்ல வேண்டிய நிலைக்கு தீவுப்பகுதி மக்கள் இன்று தள்ளப்பட்டுள்ளார்கள்.

## ப. நோ. கூ. சங்க தலைவர்கள் கூட்ட

(யாழ்ப்பாணம்)

வடபகுதி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவர்கள் கூட்டம் யாழ்ப்பாணம் மூன்றும் குறுக்குத்தெருவிலுள்ள கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் (எண்பார்வை) காரியாலயத்தில் நாளை புதன்கிழமை காலை நடைபெறவிருக்கிறது.

இக்கூட்டத்தில் கூட்டுறவு தொடர்பான பல்வேறு விடயங்கள்பற்றி ஆலோசிக்கப்படும். இ கூட்டத்தி சிரேஷ்ட கூட்டுறவு உதவி ஆணையாளர், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

இக் கூட்டத்திற்கான அழைப்பை தேசிய கூட்டுறவுச் சபைத் தலைவர் திரு. சிவமகாராஜா ப. நோ. கூ. ச தலைவர்களுக்கு அனுப்பி வைத்துள்ளார். (க)

## நாவாந்துறையில் இன்று சாம்பியன் மோதல்

(யாழ்ப்பாணம்)

நாவாந்துறை சென், நீக்கிலஸ் விளையாட்டுக் கழகத்தினால், யாழ் உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் நடைபெற்றுவந்த 7வீரர்களுக்கு பற்றும் நொக்அவுட் உதைபந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டம் இன்று நடைபெறுகின்றது.

இன்றைய இறுதியாட்டத்தில், குருநகர் பாடும்மீன் கழகமும், நாவாந்துறை சென மேரிஸ் கழகமும் மோதுகின்றன.

இன்று பிற்பகல் 4-30க்கு ஆரம்பமாகும் இப்போட்டிக்கு யாழ் உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் டாக்டர் ஜே பி ஸி பிலிப் பிரதம அதிதியாகக் கலந்து கொள்கின்றார் பரிசில்களை திருமதி . பிலிப் வழங்குவார். இச் சாம்பியன் மோதல், நாவாந்துறை சென் நீக்கிலஸ் கழக மைதானத்தில் நடைபெறும். (வி)

ஒரு வருடத்தின்பின்

## மட்டக்களப்பில் அமைச்சர் ‘தேவா’

(மட்டக்களப்பு)

உள்நாட்டலுவல்கள் அமைச்சரும் கல்குடா எம் பி யுமான திரு. கே. டபிள்யு. தேவநாயகம் மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றத்தி நடைபெற்ற காணி மோசடி வழக்கில் சாட்சியமளிக்க நேற்று வந்திருந்தார்

நீதிமன்றத்துக்கு வந்தஅமைச்சர் சாட்சியம் அளித்துவிட்டு வெளியேறும்வரை நீதிமன்ற வளவுக்குள் மட்டக்களப்புப் பொலிஸார் ஆயுதபாணிகளாகப் பலத்த பாதுகாப்பளித்தனர்

நீதிமன்றத்துக்கு வெளியே கவச வாகனங்கள் சகிதம் அதிரடிப்படையினர் விசேஷ பாதுகாப்பில் ஈடுபட்டிருந்தனர்

காலஞ்சென்ற தமது மனைவி மகேஸ்வரி தேவநாயகத்தின் பெயரில் பொய்க் கையொப்பத்தை வைத்து அவரது பெயரிலிருந்த இரு காணிகளை வாங்கிய இரு நபர்கள் மீது மட்டக்களப்புவிசேஷ குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிசார் குற்றம் சாட்டி இவ்வழக்கைத் தாக்கல் செய்திருந்தனர்.

மட்டக்களப்பு மாவட்ட நீதிபதி ஜனாப் எம். எச். காரியப்பர் முன்னிலையில் நடைபெற்ற இவ்வழக்கு விசாரணையில் அமைச்சர் தமிழில் சாட்சியமளித்தார்.

அவர் தமது சாட்சியத்தில் சம்பந்தப்பட்ட உறுதியில் உள்ள கையொப்பம் தமது காலஞ்சென்ற மனைவியுடையதல்ல என்றும் தமிழில் தமது மனைவி ஒருபோதும் கையொப்பமிடுவதில்லை என்றும் சொன்னார்.

மேல் விசாரணை மே மாதம் 21ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

அமைச்சர் தமது சாட்சியத்தை முடித்துக்கொண்டு மட்டக்களப்பு வடக்கு உதவிப் பொலிஸ் சுப்பிரிண்டன் திரு. பியோ ஸ் ஓட்டிச்சென்ற பொலிஸ் ஜீப்பின் முன்னால் இருந்தார்.

ஜீப்பின் முன்னும் பின்னும் கவச வாகனங்கள் சகிதம் அதிரடிப்படையினர் பாதுகாப்பளித்துச் சென்றனர்.

அமைச்சர் திரு. தேவநாயகம் சுமார் ஒரு வருஷ காலத்துக்குப் பின்னர் மட்டக்களப்புக்கு வந்திருந்தது குறிப்பிடத்தக்கது. [மா]

## மரண அறிவித்தல்

### சி. சிவலிங்கம்

கோண்டாவில் கிழக்கு சிவப்பிரகாசம் சிவலிங்கம் [இளைப்பாறிய உதவி அத்தியட்சகர் நீர்ப்பாசன இலாகா, புத்தளம்] அவர்கள் 28-4 86 ல் காலமானார். அன்னார், கனகமணியின் அன்புக்கணவரும், சுகந்திரன் [U, K] சியாமா, சுமித்திரா [யாழ். பல்கலைக் கழகம்] சித்திரா [வேம்படி மகளிர் கல்லூரி] சுஜீந்திரன் [St. Johns College] ஆகியோரின் அன்புத் தகப்பனும், பொறியியலாளர் கட்டிடத் திணைக்களம், கொழும்பு சுதர்சன் சண்முகராஜாவின் மாமனும், ருக்மணி, ஆரூரன், ஆனந்தசோதி, நவம், மகேஸ்வரன் ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற கனகசிங்கம், ஆரோக்கியம்மா ஆகியோரின் மருமகனும், காலஞ்சென்ற கனகசபாபதி, காலஞ்சென்ற குலசேகரம், திருமதி Dr. தருமரத்தினம், மாணிக்கசிங்கம், தனபாலசிங்கம் ஆகியோரின் மைத்துனரும், ஆவார். ஈமக்கிரியைகள் 30-4-86 காலை 9-00 மணிக்கு நடைபெறும். [C-2062]

### கந்தையா சிவகிரீடம்

க. சிவகிரீடம் [தொலைத் தொடர்பு திணைக்கள முன்னாள் பொறியியலாளர்] காலமானார். அன்னாரின் மரணச்சடங்குகள் 21 செங்குந்தா வீதி, நல்லூர்ச் சந்தை யாழ்ப்பாணத்தில் 30-4-86 புதன்கிழமை காலை எட்டு மணிக்கு நடைபெற்று, பரியோவான் கோப ஆலயம் நல்லூர் சேமக்காலையில் அடக்கம் செய்யப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகிறேன்.

[C-2051] மனைவி.

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு சித்திரை மாதம் 29-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P O Box 49, Telegram, Eelanadu, Telephone 22389, 24126.